வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 03 09.11.2022 புதன்கிழமை இதழ் : 336 பக்கங்கள் : 16





# ஒன்றிணைந்த வடக்கு - கிழக்கில் மீளப்பெறப்படாத சமஷ்டி வேண்டும்!

## வட, கிழக்கு மக்கள் கூட்டாக பிரகடனம்

யாழ்ப்பாணம், நவ. 09

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு- கிழக்கில் மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை கோரும் மக்கள் பிரகடன நிகழ்வு நேற்று வடக்கு, கிழக்கின் சகல மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் அனுசரணையுடன்,

15

# பாடசாலையில் கைகலப்பு; 13 வயது மாணவன் மரணம்!

## திருக்கோவிலில் சோகம்

திருக்கோவில், நவ. 09

திருக்கோவிலில் பாடசாலை ஒன்றில் தரம் 8 இல் கல்வி கற்கும் இரு மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்தார்.

அம்பாறை - திருக்கோவிலில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தம்பிலுவில் ஏ. பி. சி வீதியைச் சேர்ந்த சிவபாலன் கிஷாந்த் (வயது 13) என்ற மாணவனே இவ்

15

# காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக தலைவரை நீக்குக

## மனோ கணேசன் எம். பி.

கொழும்பு, நவ. 09

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என யாரும் இல்லை என்றால் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் எதற்கு என்ற கேள்வி எழுகின்றது. இதனால், அந்த அலுவலகத்தின் தலைவரை பதவி நீக்கம் செய்து, செயல்திறமையான ஒருவரை நியமிக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

காணாமல்

15

# வெட்டுக்காயங்களுடன் கிளிநொச்சியில் சடலம்!

கிளிநொச்சி, நவ. 09

புதுமுறிப்பு குளத்தின் நீர்ப்பாசன கால்வாயிலிருந்து வெட்டுக்காயங்களுடன் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி - கோணாவில் ராஜன் குடியிருப்பை சேர்ந்த ப. சத்தியராஜ் (வயது 36) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்றுக் காலை வீதியால் சென்றவர்கள் கால்வாயில் சடலம் கிடப்பதை அவதானித்து பொலிஸாருக்கு அறிவித்தனர்.

குறித்த நபர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட பின்னர் கொலையாளிகள் சடலத்தை கால்வாயில் வீசியிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# பட்டினி அபாயம் இரு மடங்கானது!

## ஐ. நா. முகவரகங்கள் எச்சரிக்கை!

- 7.9 கோடி டொலர்கள் திரட்டப்பட்டது
- மேலும் 7 கோடி டொலர்கள் தேவை

கொழும்பு, நவம்பர் 09

**இலங்கை மிக மோசமான உணவு நெருக்கடியை எதிர்கொள்ளும் நிலையிலுள்ளது. ஜூனில் 17 இலட்சம் மக்களுக்கு மனிதாபிமான உதவி தேவைப்பட்ட நிலையில், தற்போது அது 34 இலட்சமாக அதிகரித்துள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் முகவரகங்கள் தெரிவித்துள்ளன.**

அத்துடன், இவ்வாறு மனிதாபிமான உதவி தேவைப்படும் மக்களுக்கு உணவளிக்க 790 இலட்சம் டொலர்கள் திரட்டப்பட்டன. ஆனால், ஏழைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் மேலும் 700 இலட்சம் டொலர்கள்

15

# இராணுவ சோதனைச் சாவடிகள் எம்மீதான உளவியல் துன்புறுத்தல்!

## தமிழ்த் தேசியக் கட்சி காட்டம்

யாழ்ப்பாணம், நவ. 09

மாவீரர் நினைவஞ்சலி வாரம் நெருங்கிவரும் சூழ்நிலையில் போதைப்பொருள் தடுப்பு என்ற பெயரில் இராணுவ சோதனை சாவடிகள் அமைக்கப்படுவது, நீறுபூத்த நெருப்பாக நீடிக்கும் தமிழ் மக்களின் நீண்டகால துயர நினைவுகளை உரசிப்

15

# சட்டமா அதிபர் திணைக்கள சுயாதீனத்துக்கு அவமானம்!

## பேராயர் மல்கம் ரஞ்சித் சாடல்

கொழும்பு, நவ. 09

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமல் சட்டமா அதிபர் திணைக்களம் அரச அதி

15

# வியட்நாம் கடலில் மீட்கப்பட்டோரை இலங்கை அழைத்துவர நடவடிக்கை!

## வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, நவ. 09

மூழ்கவிருந்த படகிலிருந்து காப்பாற்றப்பட்டு தற்போது வியட்நாம் நாட்டில் தங்க வைக்கப்பட்டுள்ள 300இற்கும் மேற்பட்ட இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை பிலிப்பைன்ஸ் கடல் பரப்பில் படகு ஒன்று மூழ்குவதாக தகவல்கள் வெளியாகின. அந்தப் படகிலிருந்தவர்கள் சிங்கப்பூர் கடற்படையால் காப்பாற்றப்பட்டனர். வியட்நாம் கடல் ஆளுகைக்கு உட்பட்ட

15

## வேலியே பயிரை மேய்ந்த அவலம்!

# 53 வயது நபரை திருமணம் செய்ய சிறுமியை வற்புறுத்திய பெற்றோர்!

யாழ்ப்பாணம், நவ. 09

53 வயது நபரை திருமணம் செய்யுமாறு 15 வயது சிறுமியை வற்புறுத்தியதுடன், அந்த சிறுமியை அவருடன் நிர்வாணமாக காணொலி மூலம் கதைக்குமாறு வற்புறுத்திய பெற்றோரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த அவல சம்பவம் அச்சுவேலியில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் அறிய வருவதாவது,

15

ஈழநாடு



# போதைப்பொருட்கள் கடத்தலில் வடக்கு மீனவர்கள் ஈடுபடக்கூடாது

யாழ்ப்பாணம், நவ. 09

வடக்கு மீனவர்கள் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடக்கூடாது. அவ்வாறு ஈடுபடுவோர் தொடர்பில் தகவல் கிடைத்தால் அதனை தடுத்து நிறுத்த வேண்டும் என்று தம்மை சந்தித்த வடக்கு மீனவர்களின் பிரதிநிதிகளுக்கு கூறியுள்ளார் யாழ்ப்பாணம் ஆரியகுளம் நாகவிகாரையின் விகாராதிபதி.

நேற்று செவ்வாய்க்கிழமை ஆரியகுளம் நாக விகாரை விகாராதிபதியை வடக்கு மீனவர்கள் கடலட்டை விவகாரம் தொடர்பில் சந்தித்து கலந்துரையாடினர். இதன்பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வட பகுதியில் போதை பொருள் பாவனை அதி கரித்து வருகின்றது. ஆனால், அந்த போதைப் பொருள் இந்தியாவில் இருந்து இங்கு கொண்டு வரப்படுவதாக தெரிவிக் கப்படுகின்றது.



எனவே கடற்தொழி லுக்கு செல்லும் மீனவர் கள் தமது படகுகளில் ஏதாவது போதை பொருள் கடத்தப்படுவது தொடர்பில் தகவல் இருந்தால் அதனை தடுத்து நிறுத்த வேண்டும். அத்தோடு மீனவர்களாகிய நீங்கள் யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் கடத்தலுக்கு துணை போகக்கூடாது. இந்த விடயம் தொடர்பில் மீனவர்கள் அதிக அக்கறை செலுத்த வேண்டும் - என்றார். (ஐ-02)

# ஆலயங்கள்தோறும் பழமரங்கள் நடுகை செய்யும் திட்டம் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், நவ. 09

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வட மாகாண மரநடுகை மாத செயல்பாடுகளில் ஒன்றாக "பழமுதிர்ச்சோலை" என்ற திட்டத்தை இந்த ஆண்டு முன்னெடுத்துள்ளது. ஆலயங்கள் தோறும் பழமரங்கள் நாட்டுவோம் என்ற கருப்பொருளில் முன்னெடுக்கப்பட்ட இத்திட்டத்தின் தொடக்க நிகழ்ச்சி நேற்று திங்கட்கிழமை சம்பிரதாய பூர்வமாகப் பூநகரியில் நடைபெற்றது.

பூநகரி ஸ்ரீசர்வவிக்கின விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், பொருளாளர் க. கேதீஸ்வரநாதன் ஆகியோர் கலந்துகொண்டு ஆலய அறங்காவலர் குழுவினர்களிடம் பழமரக்கன்றுகளை வழங்கியதோடு, மரக்கன்றுகளை நாட்டியும் வைத்தனர்.

இதன்போது, பூநகரி பிரதேச மருத்துவமனை மருத்துவ அதிகாரி சிறீ. அனந்தசிறீயும் கலந்து கொண்டிருந்தார். தொடர்ந்து, பூநகரி ஞானிமடம் கொட்டிலு பிள்ளையார் ஆலயம் மற்றும் பூநகரி பிரதேச மருத்துவமனைக்கும் பழமரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.



வடக்கு மாகாண சபை 2014ஆம் ஆண்டு கார்த்திகையை வடமாகாண மரநடுகை மாதமாக பிரகடனப்படுத்தியிருந்தது. கார்த்திகை மழைவீழ்ச்சி கூடிய மாதம் என்பதோடு தமிழ்த்தேசிய அரசியலிலும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாதமாகும். தமிழ்மக்கள் இறந்தவர்களின் நினைவாக மரங்களை நடுகைசெய்யும் பண்பாட்டு மரபைக் கொண்டுள்ளனர். மாவீரர்களை நினைவேந்தும் நாட்களும் இம்மாதத்திலேயே அடங்குவதால் இம்மரநடுகை மாதத்தைப் பொதுஅமைப்புகளும் பொதுமக்களும் ஆண்டுதோறும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நடேஸ்வரவில் ஆய்வுகூடத் திறப்பு விழா!

யாழ்ப்பாணம், நவ. 09

காங்கேசன்துறை நடேஸ்வர கல்லூரியின் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்தின் வெள்ளிவிழா ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடம் திறப்புவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் கு. விமலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் பொ. இரவிச்சந்திரன் விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022

"பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச்சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றை கொண்டிருப்போம்"

*- பிராங் லோயிட் றைட் (அமெரிக்க கட்டட கலைஞர், எழுத்தாளர்)*

# இப்படியும் நடக்கிறது...!

சில மாதங்களுக்கு முன்னர் நன்கு அறிமுகமான ஒரு முன்னாள் ஊடகவியலாளர் தொலைபேசியில் அழைத்தார். அவர் இப்போது ஊடகவியலை கைவிட்டுவிட்டு ஏதேதோ எல்லாம் செய்து கொண்டிருக்கிறார்.

அடிக்கடி வெளிநாடுகளும் சென்று வருகின்றார். நானும் இப்போது என்ன செய்கின்றீர் என்று கேட்பதில்லை.

"உங்களுக்கு டாக்டர் பட்டம் தர ஒரு பல்கலைக்கழகம் விரும்புகின்றது. அடுத்த வாரம் பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டபத்தில் பட்டமளிப்பு விழா. தவறாமல் வந்துவிடுங்கள்" என்றார் அவர்.

"டாக்டர் பட்டமா? எவ்வளவு கொடுக்கவேண்டும்" என்றேன்.

"வழக்கமாக அதனைப் பெறுவதற்கு பதிவுசெய்யும்போது இரண்டு இலட்சம் அறவிடுவார்கள். ஆனால், உங்களுக்கு எதுவுமில்லாமலே...! நான்தான் உங்கள் பெயரை பதிவுசெய்தேன். கட்டாயம் வந்துவிடுங்கள்" என்று அன்புக்கட்டளையிட்டான் பையன்.

நானும் எதுவும் பேசவில்லை. சரி வந்து விடுகின்றேன் என்றுவிட்டு தொலைபேசியை துண்டித்துவிட்டேன். அவனுடன் எனக்கு இதெல்லாம் உடன்பாடான விடயங்கள் அல்ல என்று தர்க்கிக்க விரும்பவில்லை.

அவர் சொன்ன தினத்துக்கு முதல்நாள், மீண்டும் அழைப்பெடுத்து ஞாபகப்படுத்தினார். அப்போதுதான் கேட்டேன், "அது எந்தப் பல்கலைக்கழகமடாப்பா?" என்று.

அவர் பெயர் சொன்னார். அது எங்கே இருக்கிறது என்பதை கூகுளில் தேடிப்பார்த்தேன். அதற்காக நான் அதனைப் பெற விரும்பினேன் என்று நினைத்துவிடாதீர்கள். யார் இப்படியெல்லலாம் நமது மக்களை ஏமாற்றுகின்றார்கள் என்பதை அறிந்துகொள்ளும் ஆவல் எனக்கு. கூகுள், ஒரு கிறிஸ்தவ சபையின் இணையத்தளத்துக்கு அழைத்துச் சென்றது. அதன் ஒரு மூலையில் அந்தச் சபை பல்கலைக்கழகமும் நடத்துவதாக ஓர் இணைப்பு.

மாணவர்களோ அல்லது விரிவுரையாளர்களோ இல்லாத ஒரு பல்கலைக்கழகம்.

மறுநாள் காலை அந்த பையன் தொலைபேசி அழைப்பெடுத்தபோது அவனிடம் விபரத்தை சொல்லிவிட்டு தொடர்பை துண்டித்துக்கொண்டேன்.

இந்த விசயத்தை இப்போது எதற்கு சொல்ல வந்தேன் என்பதை எனது வாசகர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள்.

நல்லாட்சி காலத்தில் எனது தெற்கு நண்பர் ஒருவர், "வடக்கில் இளைஞர்கள் மத்தியில் அரசியல் அறிவு மிகக்குறைவாக இருக்கின்றது. அவர்களில் நல்ல அரசியல்வாதிகளை உருவாக்குவதற்கு கொழும்பில் உள்ள "இன்ஸ்ரிரியுட் ஒவ் பொலிரிக்ஸ்" நிறுவனத்தின் கிளை ஒன்றை யாழ்ப்பாணத்தில் திறப்பது நல்லது. அதன் இயக்குநர்களில் ஒருவரை உங்களோடு தொடர்புகொள்ளச் சொல்கின்றேன். அவருக்கு உதவுங்கள்" என்று கேட்டிருந்தார்.

அவர் சொன்னதுபோல அதன் இயக்குநர் தொடர்புகொண்டு "யாழ்ப்பாணம் வருகின்றேன். பொருத்தமானவர்களை அறிமுகம் செய்து தாருங்கள்" என்று கேட்டிருந்தார்.

குறிப்பிட்டதுபோல ஒருநாள் யாழ்ப்பாணம் வந்திருந்தார். பலரை அறிமுகம் செய்துவைத்திருந்த போதிலும் யாரும் அதில் நாட்டம் கொள்ளாததால் அவர் விரக்தியோடு திரும்பியிருந்தார்.

இதனை எழுதிக்கொண்டிருக்கும்போது இன்னுமொரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகின்றது.

ஓர் இளைஞன், நண்பர் ஒருவருடன் அலுவலகம் வந்திருந்தான். அவன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டு மாணவன். அரசியல் விஞ்ஞானம் படிப்பதாகக் கூறினான்.

நான் கேட்டேன், இலங்கையில் மிகப்பெரியவர் ஜனாதிபதி. அவருக்கு அடுத்தவர் யார்? என்றேன். அவன் சற்று யோசித்துவிட்டு பிரதமர் என்றான். அதற்கு அடுத்தவர் யார் என்பது அவனுக்கு தெரியவில்லை.

"சரி இதுதான் தேசிய அரசியல் சம்பந்தமானது தந்தை செல்வாவைப் பற்றி அறிந்திருக்கிறீரா" என்றேன். "அவர் யார்" என்றான்.

நமது இளைஞர்களுக்கு அரசியலை அரசியலாக பாடம் நடத்த வேண்டியது அவசியமானதுதான்.

இப்போது நான் இந்தப் பத்தியில் சொல்ல வருவது, யாழ்ப்பாணத்தில் தனது கிளை நிறுவனம் அமைக்க விரும்பிய, அந்த நிறுவனம் நமது சம்பந்தன் ஐயாவுக்கு, "ஜனநாயகத்தின் பொன்" என்று பட்டம் வழங்கி கௌரவித்திருக்கின்றது.

இவ்வாறு அவருக்கு பட்டம் வழங்கியதற்கு சொல்லியிருக்கும் காரணம் நமது கவனத்திற்குரியது.

ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கத்தை பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்பான சேவை ஆற்றியமைக்காகவே இந்த விருது வழங்கப்படுவதாக அறிவித்திருக்கின்றது.

சம்பந்தன் விருது வழங்குவதற்கு மிகப் பொருத்தமானவர்தான். அதில் யாருக்கும் சந்தேகம் இருக்கமுடியாது.

நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதற்கும் அவர் தன்னாலான பங்களிப்பை செய்திருக்கின்றார் என்பதிலும் யாருக்கும் கருத்துவேறுபாடு இருக்கமுடியாது.

ஆனால், தமிழ் அரசியல் என்பது எப்போதும் அரசுக்கு எதிரான சட்ட மறுப்பு போராட்டங்கள் மூலமே கட்டியெழுப்பப்பட்ட ஒன்று. நமது தீர்வுகளுக்காக எப்போதும் போராட வேண்டியிருக்கின்றது. ஆனால், சம்பந்தன் ஐயா அதுபோன்ற போராட்டங்களையும் முன்நின்று நடத்தியவர் அல்ல. அவர் சிங்கள மக்களுடன் நல்லெண்ண மாக இருக்கவே விரும்புபவர். அதனால்தான் அவர்கள் அவருக்கு இந்த விருதை வழங்கியிருக்கலாம்.

ஆனால், இதுபோன்ற விருதுகளை வழங்குபவர்கள், தத்தமது நிறுவனங்களின் விளம்பரங்களுக்காகவே இதுபோன்ற விருதுகளை வழங்குவதுண்டு. டாக்டர் பட்டம் வழங்குகின்ற கிறிஸ்தவ சபை தனது வியாபாரத்தை விஸ்தரிப்பதற்காக செய்வதுபோல.

இனி என்ன, அந்த நிறுவனம் யாழ்ப்பாணத்திலும் தனது கிளைகளை நிறுவலாம். எதுஎப்படியோ நல்ல அரசியல்வாதிகள் உருவானால் நல்லதுதானே. சம்பந்தன் ஐயாபோல, நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதற்கு.

**- ஊர்க்குருவி**

ஈழநாடு
Eelanadu
09.11.2022 புதன்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 24

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சமஷ்டி அரசியல் தீர்வு?

நமது சூழலில் சமஷ்டி அரசியல் தீர்வு வேண்டுமென்னும் கோஷங்களை அவ்வப்போது கேட்க முடிகின்றது. இது ஒரு பழைய கதை. அவ்வப்போது புதிய கதைபோல் சிலரால் உச்சரிக்கப்படுகின்றது. அரசு சாரா நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட சில நிகழ்வுகளில் சமஷ்டி உச்சரிக்கப்பட்டிருக்கின்றது. தேர்தல் காலங்களில் இந்தக் கோரிக்கை தாராளமாகவே உச்சரிக்கப்படுவதுண்டு. ரணில் - மைத்திரி ஆட்சி காலத்தில் சமஷ்டி தொடர்பில் புதுவிதமான விவாதமொன்று இடம்பெற்றிருந்தது. அதாவது, சமஷ்டி பெயரில் இருக்காது ஆனால், உள்ளடக்கத்தில் இருப்பதாகக் கூறும் விவாதமொன்று இடம்பெற்றிருந்தது. இறுதியில் புதிய அரசியல் யாப்பு கதைகள் புஸ்வாணமாகின.

சமஷ்டி கோரிக்கைக்கும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் உருவாக்கத்துக்கும் ஒரே வயதாகும். ஏனெனில், தமிழ் மக்கள் மத்தியில் இலங்கை தமிழ் அரசு கட்சியாக அடையாளம் காட்டப்பட்ட தமிழ் அரசுக் கட்சி சிங்கள மக்கள் மத்தியில் சமஷ்டி கட்சியாகவே அடையாளப்படுத்தப்பட்டது. அதாவது, தமிழ் அரசு கட்சியின் அரசியல் இலக்கானது சமஷ்டி தீர்வை அடைவதுதான். ஆனாலும், 1957 பண்டா - செல்வா மற்றும் 1965 டட்லி - செல்வா உடன்பாடுகள் சமஷ்டி கோரிக்கைக்கு அருகிலும் செல்லவில்லை. ஆனாலும், வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் சில அதிகாரங்களுடன் வாழ்வதற்கான ஏற்பாடுகளை குறித்த உடன்பாடுகள் உட்கொண்டிருந்தன.

செல்வநாயகம் சமஷ்டியை இலக்காக கொண்டிருந்தாலும்கூட, அதனை ஒரு பாய்ச்சலில் அடைய முடியுமென்று அவர் ஒருபோதுமே நம்பியிருக்கவில்லை. இதன் காரணமாகவே சமஷ்டி தீர்வுக்கு குறைவான தீர்வொன்றை ஏற்றுக்கொள்வதற்கு செல்வநாயகம் முயற்சித்தார். ஆனால், ஆகக் குறைந்த தீர்வொன்றைக்கூட, சிங்கள ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதன் காரணமாகவே விரக்தியடைந்த செல்வநாயகம் தனிநாட்டுக் கோரிக்கையை நோக்கி நகர்ந்தார். அதனையும் சிங்கள ஆட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுக்கும் ஓர் உபாயமாகவே முன்வைத்தார் என்றுதான் நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில், தனிநாட்டை அடையும் வழிமுறையை செல்வநாயகம் அறிந்திருக்கவில்லை.

இலங்கை தீவின் அரசியலில் சமஷ்டி கோரிக்கை சுவாரஷ்யமான ஒன்றாகும். ஏனெனில், ஆரம்பத்தில் இதனை சிங்கள தலைவர்களே பரிந்துரைத்திருந்தனர். எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க கட்சி அரசியலுக்குள் பிரவேசிப்பதற்கு முன்னர் இலங்கைக்கு சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வே சரியானதென்று வாதிட்டிருந்தார். இதனை ஆதரித்திருந்த கண்டியன் தேசிய சபை (Kandyan National Assembly) இலங்கைத் தீவை மூன்று சமஷ்டி அலகுகளாகப் பிரிக்க வேண்டும் என்னும் கோரிக்கையை டொனமூர் ஆணைக்குழுவிடம் முன்வைத்திருந்தது. அதாவது, சிங்களவர்கள் வாழும் பகுதிகளை, உயர் பகுதி மற்றும் தாழ்ந்த பகுதியென்னும் அடிப்படையில் இரண்டு சமஷ்டி அலகுகளும் அடுத்தது, தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு - கிழக்கு பகுதியை உள்ளடக்கியவாறு ஒரு சமஷ்டி அலகு என்னும் அடிப்படையிலும் தங்களுடைய பரிந்துரையை முன்வைத்திருந்தனர். வடக்கு - கிழக்கு இணைப்பை தமிழர்கள் கோருவதற்கு முன்பதாகவே, சிங்களவர்கள் பரிந்துரைத்திருந்தனர். ஆனால், அப்போதிருந்த கொழும்புமைய தமிழ் அரசியல்வாதியும் தமிழ் மக்களின் தலைவராகவும் கருதப்பட்ட பொன்னம்பலம் இராமநாதன் அதனை மறுதலித்திருந்தார். சமஷ்டி கோரிக்கைக்கு எதிரான நிலைப்பாட்டையே வெளிப்படுத்தினார்.

ஆனால், இலங்கை பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுபட்ட பின்னர், சிங்களவர்களின் கோரிக்கையை தமிழர்கள் கையில் எடுத்தனர். ஆனால், இப்போது சிங்களவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு பின்னர், தமிழர்கள் கோரும் சமஷ்டி தீர்வும்கூட, தென்னிலங்கை சிங்களவர்களால் தனிநாடாகவே நோக்கப்பட்டது. அது இன்றுவரையில் தொடர்கின்றது. சமஷ்டி என்பது தமிழர்களுக்கு அழகான சொல்லாகவும் சிங்களவர்களுக்கு அசிங்கமான சொல்லாகவும் மாறியிருக்கின்றது. இந்தப் பின்னணியில் சமஷ்டி தீர்வை எவ்வாறு அடைவதென்னும் கேள்விக்குப் பதில்லாமல் நமது அரசியல் உரையாடல்கள் தொடர்கின்றன.

# வடக்கு - கிழக்கு மக்களை குறிவைக்கும் ஆட்கடத்தல் - போதைவஸ்து!

**இராஜதந்திரி**

**ஒரு** சிலதினங்களுக்கு முன்னர் கனடா நோக்கி 300 பயணிகளை சட்ட விரோதமான முறையில் ஏற்றிச் சென்ற கப்பலொன்று பிலிப்பைன்ஸ் அருகே கடலில் மூழ்கும் நிலை ஏற்பட்டது. எனினும், அதில் பயணித்தவர்கள் காப்பாற்றப்பட்டனர் இவர்களில் பெண்கள். குழந்தைகளும் காணப்பட்டிருந்தனர்.

இந்தத் தகவல் மிகவும் மனதை உருக வைப்பதாக இருப்பதோடு அப்பாவி மக்கள் படுபாதக ஆட்கடத்தல் பேர்வழிகளால் எவ்வளவு தூரம் ஏமாற்றப்படுகின்றனர் என்பதையும் அறிய முடிகின்றது.

ஆட்கடத்தல் நடவடிக்கை சர்வதேச ரீதியாக பெருமளவில் இடம்பெறுகின்றது. இதற்கென ஒரு வலைப்பின்னலான முறையில் ஆட்கடத்தல் பேர்வழிகள் இயங்குகின்றனர்.

இந்த வலைப்பின்னல் உலகில் அரசியல், பொருளாதார ரீதியாக பாதிப்புற்ற நாடுகளைச் சேர்ந்த மக்களையே குறிவைப்பதாக இருக்கின்றது.

இலங்கையில் எண்பதுகளின் நடுப்பகுதியிலிருந்து அரசியல் மற்றும் பொருளாதார பூசல்கள் காரணமாக வடக்கு - கிழக்கைச் சேர்ந்த மக்கள் புலம்பெயர ஆரம்பித்தனர். இதன்மூலம் ஆட்கடத்தல் பேர்வழிகள் பெரிதும் பயனடைந்தனர். அச்மயங்களில் கூட புலம்பெயர ஆரம்பித்த மக்களில் பலர் பாதிக்கப்பட்டனர். ஆட்கடத்தல் பேர் வழிகளால் ஏமாற்றப்பட்டும் திருப்பி அனுப்பப்பட்டும் மரண அபாயங்களுக்கு உள்ளாகியுமிருந்தனர். இதனால் தப்பிப் பிழைத்தவர்கள் ஒருபுறமிருக்க பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களும் அநேகமானவர்களாக இருந்தனர்.

ஆனால், தற்போது வடக்கு - கிழக்கில் ஆட்கடத்தல் மற்றும் அதிகரித்துச் செல்லும் போதைவஸ்து பாவனை என்பவை நீண்ட கால யுத்தத்துக்குப் பின்னர் அமைதியான வாழக்கைக்கு திரும்பியுள்ள மக்களை இலக்கு வைத்தே மேற்கொள்ளப்படுகின்றன.

வடக்கு - கிழக்கு மக்களுக்கு புலம்பெயர்ந்தோர் அனுப்பி வைக்கும் பணம் பலமிக்க யூரோ, டொலர், ஸ்ரேலிங் பவுண்ஸ் போன்றவற்றில் கிடைத்து வருகின்றது. எனவே, ஆட்கடத்தல் பேர்வழிகள், போதைவஸ்து விநியோக பேர்வழிகள் ஆகியோர் வடக்கு - கிழக்கு மக்களை தமக்கு வாய்ப்பாக பயன்படுத்தி வருகின்றனர்.

வடக்கு - கிழக்கு மக்கள் சேமிப்பு மற்றும் பணத்தை அளவு கணக்கோடு செலவிடுதல் போன்றவற்றில் அவதானமாக இருப்பவர்கள். ஆனால், தற்போது வெளிநாட்டுச் செல்வாக்கு காரணமாக இத்தகைய நிலை மாற்றம் கண்டு வருகின்றது.

வடக்கு - கிழக்கில் குற்றவியல் சம்பவங்கள் மற்றும் வாகன விபத்துகள் என்பவை அதிகரித்துள்ளன. இதற்கு போதைவஸ்து பாவனையே முக்கிய காரணமாகவுள்ளது. இதுதவிர, வட பகுதியின் கரையோரப் பகுதிகளும் போதைவஸ்துகாரர்களின் கடத்தல் நடவடிக்கைகளுக்குரிய வாய்ப்பான பிரதேசங்களாக இருக்கின்றன.

சர்வதேச பொலிஸ் நிறுவனமான இன்டர்போல் போதைவஸ்து கடத்தல், ஆட்கடத்தல் என்பவையே இன்று சர்வதேச ரீதியில் சட்டம் ஒழுங்கு என்பவற்றுக்கு பெரிதும் சவால் விடுகின்றன என்று கோடிட்டுக்காட்டியுள்ளது.

ஓரிரு தினங்களுக்கு முன்னர் பிலிப்பைன்ஸ் கடல் பரப்பில் 300இற்கும் மேற்பட்டோருடன் ஆட்கடத்தல் பேர்வழிகளால் கொண்டுசெல்லப்பட்டு அனர்த்தங்களுக்கு உள்ளானவர்கள் பற்றிய தகவல் பெரும் கவலையளிப்பதாக இருப்பதோடு நேரடியாக பாதிக்கப்பட்ட மக்கள் மாத்திரமல்ல. அவர்களைச் சார்ந்திருப்போரும் பெரிதும் மனக்கிலேசத்துக்கு உள்ளாகியிருப்பார்கள் என்பதை அறிய முடியும்.

அப்பாவி மக்களின் உயிரோடு போதைவஸ்துக்கு கும்பலும் ஆட்கடத்தல் பேர்வழிகளும் தயவுதாட்சண்யமின்றி விளையாடி வருகின்றனர். தற்சமயம் மக்களுக்கு ஆசை காட்டி தாம் கூட்டிச் செல்வதற்குரிய நாடாக அவுஸ்திரேலியா , கனடா ஆகிய நாடுகளையே ஆட்கடத்தல் பேர்வழிகள் காண்பித்து வருகின்றனர். ஆனால், இந்த இரு நாடுகளும் மிக உறுதியாக தமது பிரதேசங்களுக்குள் சட்ட விரோதமாக வருவோர் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்படுவர் என்று கூறியுள்ளன.


மேற்குறிப்பிட்ட நாடுகள் தமது கடல் பிராந்தியங்களில் தத்தமது நாடுகளின் கரையோரப் பாதுகாப்புப்படை, கடற்படை என்பவற்றை நிறுத்தி வைத்துள்ளன. இப்படைகள் செய்மதிகளின் உதவியோடு சட்ட விரோத கப்பல்கள், படகுகளை நோட்டமிட்டு தடுத்து வருகின்றன.

ஆனால், ஆட்கடத்தல் பேர்வழிகள் இவற்றையெல்லாம் மூடிமறைத்து அப்பாவி மக்களை ஏமாற்றி வருகின்றனர். கூடவே, ஆட்கடத்தல் பேர்வழிகள் தாம் பாவித்து வருகின்ற படகுகள் தரம் கெட்டவையாக இருக்கின்றன. அத்துடன் அவற்றில் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு மேலாக மக்களை கொண்டு செல்பவையாகவும் இருக்கின்றன.

இலட்சக்கணக்கில் பணத்தை வசூலித்து மக்களின் உயிரோடு விளையாடும் கடத்தல் பேர்வழிகள் தமது வலைப்பின்னல் அமைப்பில் உள்ளவர்களோடு தாம் பெறுகின்ற பணத்தை சர்வதேச ரீதியில் பரிமாறிக்கொள்கின்றனர்.

மக்களின் உயிரோடு விளையாடும் போதைவஸ்து பாவனை, ஆட்கடத்தல் என்பவை குறித்து உரிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதே வடபுலத்தவரின் ஒன்றுபட்ட அதேசமயம் பரந்துபட்ட நடவடிக்கையாக இருக்கவேண்டியதாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். பிறரை மகிழ்ச்சிபடுத்துமாறு திட்டமிட்ட ஒரு வேலை முடிப்பீர்கள்.

**இடபம்**

தவறான நபர்களின் நட்பினால் சில பிரச்னைகளை சந்திக்க நேரும். வரவை விட செலவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி குறித்து பேச்சு எழும். மிருக சீரிடம்.

**மிதுனம்**

எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். தடைபட்டிருந்த செயல்கள் நடந்தேறும். புதிய முதலீட்டால் லாபம் அதிகரிக்கும். வர வேண்டிய பணம் வந்து சேரும்.

**கடகம்**

வேலை தேடி வந்தவர்களுக்கு நல்ல தகவல் வரும். திருப்தியான நாள். உங்கள் முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள். இழுபறியாக இருந்தவற்றில் மாற்றம் உண்டாகும்.

**சிம்மம்**

குடும்ப பிரச்னையில் ஒரு முடிவிற்கு வர முடியாமல் தடுமாற்றம் அடைவீர்கள். எந்தவொரு செயலிலும் ஈடுபாடு காட்ட முடியாமல் திணறுவீர்கள். எதிரிகளால் சங்கடங்களுக்கு ஆளாவீர்கள்.

**கன்னி**

மனதில் பதட்டம் அதிகரிக்கும். உறவினர் ஒருவரால் சங்கடம் ஒன்றை சந்திப்பீர்கள். அலைச்சல் அதிகரிக்கும். உடல் சோர்வடையும். எதிர்பார்த்த லாபம் தடைப்படும்.

**துலாம்**

நண்பர்கள் ஆதரவால் உங்கள் எண்ணம் நிறைவேறும். நினைத்ததை நினைத்தபடி சாதிப்பீர்க. உங்கள் அறிவாற்றல் வெளிப்படும். தடைபட்டிருந்த முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

**விருட்சிகம்**

உங்களிடம் புதிய உற்சாகம் தோன்றும். விலகிச் சென்ற உறவினர்கள் உங்களைத் தேடி வர. மறைமுக எதிர்ப்புகளை சரி செய்வீர்கள். முக்கிய வேலையாக வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள்.

**தனுசு**

எதிர்பார்த்த நன்மையை உங்களால் காண முடியாமல் போகும். யோசித்து செயல்பட வேண்டிய நாள். உங்கள் உறவினர்களிடம் பிரச்னை ஏற்பட்டு அதன் வழியே சங்கடம் அடைவீர்கள்.

**மகரம்**

வேலையில் இருப்போர் தங்கள் வேலைகளில் கவனமுடன் செயல்பட வேண்டும். புதிய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள். அதில் குழப்ப நிலை உண்டாகும். அரசு விவகாரங்கள் இன்று இழுபறியாகும்.

**கும்பம்**

நினைத்ததை சாதிப்பீர்கள். குடும்பத்தினர் உங்கள் முயற்சிக்கு உதவியாக இருப்பார்கள். உங்கள் செல்வாக்கு உயரும். தொழிலை விரிவு செய்யும் முயற்சி வெற்றியாகும்.

**மீனம்**

வேலை விஷயமாக வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். அரசு வழியில் நன்மை உண்டாகும். உற்சாகத்துடன் செயல்பட்டு உங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

# “காப்பாற்றப்பட்ட ஈழத்தமிழர்கள் விரும்பும் நாட்டில் தஞ்சம் வழங்குக!”

சென்னை, நவ. 09

படகு விபத்திலிருந்து மீட்கப்பட்ட ஈழத்தமிழ் அகதிகளுக்கு அவர்கள் விரும்பும் நாட்டில் தஞ்சம் பெற்றுத் தர ஐ. நா. நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து நேற்று அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் இட்ட பதிவில்,

“கனடா நாட்டில் தஞ்சம் புகும் நோக்குடன் 306 ஈழத் தமிழ் அகதிகள் பயணித்த படகு பிலிப்பைன்ஸ் அருகில் புயலில் சிக்கித் தவித்த நிலையில், அவர்களை சிங்கப்பூர் அதிகாரிகள் மீட்டு வியட்நாமுக்கு அனுப்பி வைத்திருப்பது நிம்மதியளிக்கிறது. சிங்கப்பூர் அரசு காலத்தினால் செய்த உதவி பாராட்டத்தக்கது.

முதலில் போராலும், பின்னர் பொருளாதார நெருக்கடியாலும் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்கள் இலங்கையில் தொடர்ந்து வாழ முடியாமல், பிற நாடுகளில் தஞ்சமடைய தவித்துக் கொண்டிருக்கின்றனர். இந்தியாவில் அவர்களுக்கு அகதிகள் தகுதியும், கண்ணியமான வாழ்வுரிமையும் மறுக்கப்படுகிறது.

இதனால் கனடா, இங்கிலாந்துக்கு சொந்தமான டிகா கோகார்சியா தீவு, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் தஞ்சம் தேடி பாதுகாப்பற்ற முறையில் கப்பல் பயணம் மேற்கொள்ளும் ஈழத் தமிழ் அகதிகள் பல தருணங்களில் விபத்துகளில் சிக்கிக் கொள்கின்றனர். இதுவரை நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

படகு விபத்திலிருந்து மீட்கப்பட்ட ஈழத்தமிழ் அகதிகளுக்கு அவர்கள் விரும்பும் நாட்டில் தஞ்சம் பெற்றுத் தரவும், இலங்கையில் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் அந்த நாட்டின் ஏழை, எளிய மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கவும் ஐ. நா. நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றுள்ளது.

(ஐ)

# தி. மு. கவும் அ. தி. மு. கவும் அண்ணன் தம்பி கட்சிகளே

## பன்னீர்செல்வம் சொல்கிறார்

சென்னை, நவ. 09

“தி. மு. கவும் அ. தி. மு. கவும் அண்ணன், தம்பி இயக்கம்தான். ஆனால், நாங்கள் மாறுபட்ட பாதையில் சென்று கொண்டிருக்கிறோம். எங்களுடைய பாதை எம். ஜீ. ஆர். உருவாக்கிய பாதை. அந்த பாதையில் நாங்கள் பயணித்துக் கொண்டிருக்கிறோம். தி. மு. கவினர் அவர்களுடைய பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றனர்” என்று ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

அ. தி. மு. கவின் கூட்டணி தொடர்பில் அவரிடம் கேள்வி எழுப்பிய நிலையில், ”அ. தி. மு. கவைப் பொறுத்த வரை, இது தொண்டர்களின் நலனுக்காக உருவாக்கப்பட்ட இயக்கம். தொண்டர்களுக்கான இயக்கமாகத்தான் இதன் பரிணாம வளர்ச்சி 50 ஆண்டு காலமாக இருந்திருக்கிறது.

அ. தி. மு. கவில் அனைத்துத் தொண்டர்களும் ஒருங்கிணைந்து ஒற்றுமையாக நிற்கின்றனர். ஆனால், பிரச்னை தலைமையில் இருப்பது போன்ற ஒரு மாயத்தோற்றம் உருவாகியிருக்கிறது. அது போகப்போக சரியாகிவிடும்” - என்றார்.

# தமிழகத்தில் பொலிஸாரின் கைகள் கட்டப்பட்டுள்ளன!

## தமிழக பா. ஜ. கட்சி

மதுரை, நவ. 09

”தமிழகத்தில் பொலிஸாரின் கைகள் கட்டப்பட்டுள்ளன. குற்றம் செய்பவர்களை அதட்டி பேசுவதற்கு கூட பொலிஸ்காரர்கள் தயங்குகின்றனர். தேவைப்படும்போது லத்தியை பயன்படுத்த தவறக் கூடாது” என்று தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

இதனால்தான், தமிழகத்தில் மது மற்றும் போதைப் பொருட்களின் பாவனை அதிகரித்துள்ளது. மேலும், ”தமிழகத்தில் 2019 வரை ஹிந்தி திணிக்கப்பட்டது. 1986இல் வந்த கல்வி கொள்கையில் ஹிந்தி மொழி கட்டாயமாக இருந்தது. மத்தியில் காங்கிரஸ், தி. மு. க. ஆட்சியில் இருந்தபோதும் ஹிந்தி கட்டாயமாக இருந்தது.

இப்போது முதலமைச்சர் ஸ்டாலின் பா. ஜ. கவின் கொள்கைக்கு வந்துள்ளார். தமிழகத்தில் மருத்துவம், பொறியியல் படிப்பை தமிழில் கற்பிக்க வேண்டும் என பா. ஜ. கதான் முதலில் குரல் கொடுத்தது. இப்போது தமிழக அரசு அதை அமல் படுத்தியுள்ளது.

பொறியியல் படிப்பை 5 கல்லூரிகளில் 69 மாணவர்கள் மட்டுமே முழுமையாக தமிழில் கற்கின்றனர். ஒரு லட்சம் மாணவர்களில் 69 மாணவர்கள் மட்டும் தமிழில் பொறியியல் படிப்பு படித்தால் தமிழ் எப்படி வளரும்? என்றும் கேள்வி எழுப்பினார்.



தஞ்சை பெருவுடையார் கோயிலில் ஆயிரம் கிலோ அரிசி யில் செய்யப்பட்ட அமுது மற்றும் 500 கிலோ மரக்கறிகள் கொண்டு நேற்று அன்னாபிஷேகம் செய்யப்பட்டது.

# எதிரணியின் 13 எம்.பிக்கள் ஆளுங்கட்சி பக்கம் தாவல்?

கொழும்பு, நவ. 09

**ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிரணி பக்கம் உள்ள 13 பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணையவுள்ளனர் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

சர்வக்கட்சி அரசாங்கம் அமைப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதற்காகவே இவர்கள் 'பல்டி' அடிக்கின்றனர் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் சிலருக்கு அமைச்சு பதவி வழங்கப்படவுள்ளது.

வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்ட பின்னர், அதற்கு ஆதரவு என்ற போர்வையில் தாவலை அரங்கேற்றுவதற்கான ஏற்பாடுகள் வெற்றியளித்துள்ளது என தெரிய வருகின்றது.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளுங்கட்சி பக்கம் செல்லமாட்டார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் அறிவித்துள்ளார். (அ)





# புலோலி விவசாயிகள் நேற்றுப் போராட்டம்!

யாழ்ப்பாணம், நவ. 09

வடமராட்சி, புலோலியில் விவசாயத்துக்கு தேவையான உள்ளீடுகள் மற்றும் மண்ணெண்ணெய் வழங்க கோரி விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புலோலி கமநலசேவை நிலையத்துக்கு முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை ஒன்றுகூடிய விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் பேரணியாக பருத்தித்துறை பிரதேச செயலகம் வரை சென்றனர்.

பேரணியின் நிறைவில் மாவட்ட செயலருக்கான மகஜர் பருத்தித்துறை பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டது. (அ-2)

# பொது நிறுவனங்களை தனியார் மயமாக்கும் திட்டம் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கம்?

கொழும்பு, நவ. 09

2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை தனியார்மயமாக்குவதற்கான முக்கிய திட்டங்களை அரசாங்கம் அறிமுகப்படுத்தவுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை எதிர்வரும் 14 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதத்திற்காக சமர்ப்பிக்கவுள்ளார்.

இது முதன்மையாக சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்திற்கு இணங்க பொருளாதார சீர்திருத்தங்களை செயற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட வரவு செலவுத் திட்டமென தெரிவிக்கப்படுகிறது.

தனியார் துறையின் பங்களிப்புடன் அபிவிருத்திக்காக சுமார் 40 அரச நிறுவனங்களை அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில், சுமார் பத்து நிறுவனங்களை உடனடியாக தனியார்மயமாக்கி அபிவிருத்தி செய்ய அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவற்றில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் பெற்றோலிய பொருட்கள் விநியோகம் ஆகியவை அடங்கும் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஹெரோயின் போதைப்பொருளுடன் வடமராட்சியை சேர்ந்த 4 பேர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 09

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் வடமராட்சிப் பகுதிகளைச் சேர்ந்த நால்வர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 126 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியடி பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய வல்வெட்டித்துறை மற்றும் நெல்லியடி பகுதிகளைச் சேர்ந்த 25 மற்றும் 30 வயதுக்குட்பட்ட நால்வரே கைது செய்யப்பட்டனர். (அ-2)



# 90 கிலோ கேரள கஞ்சா அரியாலையில் மீட்பு!

யாழ்ப்பாணம், நவ. 09

அரியாலைப் பகுதியில் கேரள கஞ்சாப் பொதிகள் நேற்று இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தியாவில் இருந்து கடத்தி வந்ததாக நம்பப்படும் 90 கிலோகிராம் கேரளக் கஞ்சாவே இராணுவத்திடம் சிக்கியுள்ளது.

நேற்று அதிகாலை விசேட சோதனை நடவடிக்கையின் போதே 42 கஞ்சாப் பொதிகளை இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட கஞ்சாப் பொதிகளில் இருந்த 90 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவும் சட்ட நடவடிக்கைகளுக்காகப் அரியாலைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. (அ)

# நவம்பர் 15 ஆம் திகதி உச்சத்தை தொடும் உலக சனத்தொகை

கொழும்பு, நவ. 09

உலக மக்கள்தொகை வரும் நவம்பர் 15ஆம் திகதிக்கு 8 பில்லியனை தொடும் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

அதை அடுத்து உலகின் அதிகரிக்கும் வெப்பநிலை, மனிதர்கள் பூமியின் வளங்களை எப்படிப் பயன்படுத்துகின்றனர் ஆகியவை குறித்த அக்கறைகள் அதிகரித்துள்ளன.

பூமியின் மக்கள் தொகை மேலும் அதிகரிக்கும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. ஆனால் அந்த அதிகரிப்பு மெதுவடையும் என்றும் பிராந்திய ரீதியான ஏற்றத்தாழ்வுகள் இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

உலக மக்கள்தொகை வளர்ச்சி 1960களில் உச்சத்தைத் தொட்டது. 1962ஆம் ஆண்டுக்கும் 65ஆம் ஆண்டுக்கும் இடையே வருடாந்திர வளர்ச்சி மிக அதிகமாக 2.1 வீதம் இருந்தது. (அ)

### யால சம்பவம்

# கடுமையாக சட்டம் அமுல்படுத்தப்படும்

கொழும்பு, நவ. 09

யால சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக கடுமையாக சட்டம் அமுல்படுத்தப்படும் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை கருத்து வெளியிட்ட அவர், இந்த சம்பவம் குறித்த விசாரணைக்கு எந்த இடையூறும் ஏற்படாது என கூறினார்.

தாம் வெளிநாடு சென்றிருந்த வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். (அ)

# தாய்லாந்து தூதுவரின் இல்லத்துக்குள் திருட்டு

கொழும்பு, நவ. 08

கொழும்பு 7 மலர் வீதியிலுள்ள தாய்லாந்து தூதுவர் போஜ் ஹன்பொல்லின் உத்தியோகபூர்வ இல்லத்துக்குள் திருடன் ஒருவன் அத்துமீறி நுழைந்து சுமார் ரூ.3 இலட்சம் பணம் மற்றும் அங்கிருந்து பெறுமதியான பொருட்களையும் திருடிச் சென்றுள்ளாதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2.00 மணிக்கும் 7.00 மணிக்கும் இடையில் இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருடப்பட்ட பொருட்களில் கையடக்கத் தொலைபேசி, நினைவுப் பரிசு, தாய்லாந்து நாணயம் மற்றும் இலங்கை ரூபா என்பன உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வீட்டுக்கு வெளியில் நின்றிருந்தபோதும், மற்றொரு தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர் வீட்டுக்குள் இருந்தபோதும் இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# மகேஷ் கட்டுலந்த வெளியிட்ட கருத்தே மக்களை கோபத்திற்கு உள்ளாக்கியது

## பாராளுமன்றில் கூறினார் சுமந்திரன்

கொழும்பு, நவ. 09

**காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் தெரிவித்த கருத்து மக்களை மேலும் கோபத்திற்கு உள் ளாக்கியது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று பாராளுமன்றின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.**

காணாமலாபோவார்கள் பற்றி விசாரணைகளை மேற்கொள்ள அந்த அலுவலகம் நிறுவப்பட்ட நிலையில் விசாரணைகளை மேற்கொள்ளாமலேயே இவ்வாறான அறிக்கையை வெளியிடுவது, விசாரணை குறித்த நம்பிக்கையைத் தராது என அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை தமது பிள்ளைகளை, கணவரை இராணுவத்திடம் தாமே கையளித்ததாகப் பெற்றோர் மற்றும் மனைவிமார் தெரிவிக்கின்ற நிலையில் தம்மிடம் எவரும் சரணடையவில்லை என இராணுவம் வெளியிடும் அறிக்கை மக்களுக்கு மேலும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஆகவே நீதி அமைச்சின் கீழ் உள்ள காணாமல் போனோர் அலுவலகம் சுயாதீனமாகவும் பக்கச்சார் பின்றியும் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறினார்.

இதேவேளை, இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள இலங் கையர்களை மீண்டும் நாட்டில் குடியேற்ற எடுக்கும் முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்த சுமந்திரன், இருப்பினும் நாட்டில் அவர்களுக்கு போதுமான அளவு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (அ)

# வவுனியா மங்கைக்கொடி குளத்தை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

வவுனியா, நவ. 09

வவுனியா மன்னகுளம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நீண்ட காலமாக கைவிடப்பட்ட நிலையில் உள்ள மங்கைக்கொடி என்ற குளத்தினை புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

180 குடும்பங்கள் வாழும் கொல்லர் புளியங்குளத்திற்கு பின்புறமாக அமைந்துள்ள மங்கைக்கொடி என்ற குளம் சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் உடைப்பெடுத்தமையினால் திருத்தப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

எனினும் இக்கிராம மக்கள் 1996 ஆம் அண்டு காலப்பகுதியில் இருந்து குறித்த குளத்தை திருத்தம் செய்து தருமாறு கோரியபோதிலும் அது நிறைவேறாத நிலையில் பல அமைச்சர்கள் வடமாகாண சபை மற்றும் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களிலும் கோரிக்கை முன்வைத்திருந்தனர். ஆயினும் எதுவும் நடக்கவில்லை.

விவசாயத்தையே அடிப்படையாக கொண்ட இக் கிராம மக்கள் தமது வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு மங்கைக்கொடி குளத்தைத் திருத்தம் செய்து தருமாறு மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு; கடவுச்சீட்டு விநியோகம் தாமதம்!

கொழும்பு, நவ. 09

கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக கடவுச்சீட்டுகள் விநியோகிக்கும் நடவடிக்கை தாமதமடைந்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடவுச்சீட்டு பெறுவதற்கான விண்ணப்பங்கள் மறு அறிவித்தல் வரை ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது என திணைக்களம் தெரிவித்துள்ளது.

கட்டமைப்பை வழமைக்குக் கொண்டுவரும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் பியுமி பண்டார தெரிவித்தார். (அ)

# அழுத்தங்களுக்கு எதிராக அரசினால் அடக்குமுறை!

## அனுரகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 09

மக்கள் எதிர்நோக்கும் அழுத்தங்களுக்கு பதில் தேட வேண்டும், ஆனால் அழுத்தங்களுக்கு எதிராக அடக்குமுறையை அமுல்படுத்துவதே அரசாங்கத்தின் பதில் என தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றில் தெரிவித்தார்.

அடக்குமுறையின் மூலம் பதவி வகிக்கலாமென கற்பனை செய்த உலகத் தலைவர்கள் வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் வீழ்ந்துள்ளதாகவும் திஸாநாயக்க குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்த பாராளுமன்ற விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அனுரகுமார திஸாநாயக்க,

குப்பைக்கூடைக்குள் வீழ்ந்த வரலாற்றை இலங்கை எதிர்பார்க்கவில்லை.

சோமாலியாவில் கப்பலைச் சிறைபிடித்த முரட்டுக் கும்பல் போன்றே இன்றைய அரசாங்கம் செயற்படுகிறது. போராட்டக்காரர்கள் மற்றும் பிக்குகளை தடுத்து வைக்கப் படுவதற்கான காரணத்தை கூற முடியுமா? மக்கள் எழுச்சியை நசுக்குவதற்கு மேற்கொள்ளப் படும் அனைத்து நடவடிக்கைகளாலும் நாடு உலகில் தனிமைப்படுத்தப்பட்டு வருகிறது.

இலங்கையின் புள்ளி விவரங்கள் உண்மையான நிலைமையை மறைப்பதற்காகவே அமைந்துள்ளன.

இந்த புள்ளிவிவரங்கள் உண்மையான நிலைமையை பிரதிபலிக்கவில்லை. அரசாங்கத்திடம் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் திட்டம் எதுவும் இல்லை. அதனால் பெரும் சமூக அமைதியின்மைக்கு முகங்கொடுத்துள்ளது - என்றார். (அ)

# பாடசாலை ஆசிரியர்கள் உடையில் மாற்றமில்லை

கொழும்பு, நவ. 09

ஆசிரியர்களின் உடையை மாற்றுவதற்கு தாம் தீர்மானம் எடுக்கப்போவதில்லை என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆசிரியர் களின் உடை தொடர்பான விவாதம் இடம்பெற்றது.

இதன்போது, ஆசிரி யர்களின் உடையை எந்த வகையிலும் மாற்றுவதற்கு தாம் தீர்மானம் எடுக்கப்போவதில்லை என கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். அதற்கான எந்த நடவடிக்கைகளையும் கல்வி அமைச்சு மேற்கொள்ளாது எனவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

சேலையைத் தவிர வேறு வசதியான ஆடைகளை ஆசிரியர்கள் அணிய அனுமதிக்கவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் பரிந்துரைக்கப்பட்டது.

ஆனால் இதற்கு மகாசங்கத்தினர் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# எரிபொருளை விநியோகிக்காத நிலையங்கள் குறித்து விசாரணை

கொழும்பு, நவ. 09

கடந்த நாட்களில் நுகர்வோருக்கு எரிபொருள் விநியோகிக்காத எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு எரிபொருளை விநியோகிக்காத எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, கடந்த நாட்களில் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்படவில்லை.

அதன் காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் எரிபொருளுக்கான வரிசைகள் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. (அ)

# குரங்குக் காய்ச்சல் தொற்றுக்குள்ளான பலர் வெளிநாடுகளிலிருந்து இங்கு வரும் அபாயம்!

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 09

உலகின் ஏனைய நாடுகளில் பரவி வரும் குரங்குக் காய்ச்சல் தொற்றுக்குள்ளான நோயாளர் கள் பலர் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் அபாயம் உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜூம் தொழிநுட்பத்தினூடாக இடம்பெற்ற குரங்குக் காய்ச்சல் தொடர்பான விசேட கலந்துரையாடலின் போது உரையாற்றிய சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவின் நிபுணர் வைத்தியர் சிந்தன பெரேரா, வெளிநாடு களில் இருந்து அறிகுறியற்ற நோயாளர்கள்கூட இலங்கைக்கு வரமுடியும் எனவும் தெரிவித்தார்.

இலங்கையில் அடையாளம் காணப்பட்ட நோயா ளரை சிறப்பாக நிர்வகித்து, அவரை சிகிச்சைக்காக அரசாங்க மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால் இதுபோன்ற நோயாளிகள் அதிகம் வரும் அபாயம் உள்ளதென்றும் இந்த நோய் உலகின் ஏனைய பகுதிகளில் இன்னும் இருப்பதால், ஒரு கட்டத்தில் அதிக மான வழக்குகள் பரவக் கூடும் என்றும் அவர் எச்சரித்தார்.

தற்போது அறிகுறியுடன் அடையாளம் காணப்பட்ட ஒருவர் சிகிச்சை பெற்று வரும் நிலையில், சில நேரங்களில் அறிகுறியற்ற நோயாளிகள் கூட இலங்கைக்கு வரலாம் என் றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சிலருக்கு அறிகுறிகள் இல் லாமல் இருக்கலாம். எனவே நமது அனைத்து சுகாதார அதிகாரிகளும் சமூக மருத்துவ பிரிவுகளும் இவ்விடயத்தில் கவனம் செலுத்துவது மிகவும் அவசியம் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, குரங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவ தற்கு தடுப்பூசி போட வேண் டிய அவசியம் தற்போது இல்லை என சுகாதார அமைச்சின் பொது சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாய கம் வைத்தியர் மகேந்திர ஆனந்த் தெரிவித்துள்ளார். (அ)

# ஹெரோயினை பகிர்ந்த இரு மீனவர்கள் கைது!

கொழும்பு, நவ. 09

பேருவளை -அம்பேபிட்டிய பிரதேசத்திலுள்ள வீடொன்றை சோதனைக்குட்படுத்தியபோது 08 கிலோ 304 கிராம் ஹெரோயின் அடங்கிய 07 பொதிகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பேருவளை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதான சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டு, 07 நாட்களுக்கு தடுத்து வைக்கும் உத்தரவு பெறப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 06ஆம் திகதி தங்காலை-குடாவெல்ல பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 544 கிராம் 300 மில்லி கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் வெளியான தகவலையடுத்து இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 11ஆம் திகதி குடாவெல்ல மீன்பிடித் துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற மீனவப் படகொன்று மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, ஆழ்கடல் பகுதியில் 25 ஹெரோயின் பொதிகள் மிதந்து கொண்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்ட ஹெரோயின் தொகையை குறித்த படகிலிருந்த 06 பேர் மற்றும் படகின் உரிமையாளர் ஆகியோர் பகிர்ந்துகொண்டுள்ளமை பின்னர் தெரியவந்துள்ளது.

அதற்கமைய, பேருவளை மற்றும் குடாவெல்ல ஆகிய பகுதிகளில் கைது செய்யப்பட்டவர்கள், குறித்த படகிலிருந்த ஹெரோ யினை பகிர்ந்துகொண்ட இருவர் என்பது தெரியவந்துள்ளது. ஏனைய சந்தேகநபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை போதைப்பொருள் ஒழிப்புப்பிரிவு முன்னெடுத்து வருகின்றது. (அ)

# தோட்ட மக்களை வஞ்சித்தால் நாமும் ஜெனிவா செல்வோம்!



## சபையில் வடிவேல் சுரேஷ்

கொழும்பு, நவ. 09

"மலையக பெருந்தோட்ட மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது. தோட்டக் கம்பனிகள் அடாவடியில் ஈடுபடுகின்றன. தொழில் பிரச்னைகள் பொலிஸ் நிலையம்வரை செல்கின்றது. இந் நிலைமை நீடித்தால் நாங்களும் ஜெனிவா செல்ல வேண்டிவரும்."

-இவ்வாறு பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பதுளை, ஹாலிஎல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அரசியல் நியமனம் பெற்றவர். அவர் தோட்டத் தொழிலாளி ஒருவரை கடுமையாக தாக்கியுள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்கு தொழில் அமைச்சு, தொழில் திணைக்களம் என்பன இருக்கின்றன. எதற்கு பொலிஸார் தலையிடவேண்டும்? தோட்டக் கம்பனிகள் இன்று தான்தோன்றித்தனமாக செயற்படுகின்றன. தேவையற்ற பிரச்னையை தோற்றுவிக்க முயற்சிக்கின்றன.

எனவே, மலையக மக்களுக்கு அநீதி தொடர்ந்தால் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையையும், இந்தியாவையும் நாட வேண்டிவரும்- என்றார். (அ)

# தனிநபர்களுக்கான புதிய வருமான வரி விதிகள் டிசெம்பர் முதல் அமுல்

கொழும்பு, நவ. 09

உள்நாட்டு இறைவரித் திருத்தச் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, தனிநபர்களுக்கான புதிய வருமான வரி விதிகள் டிசெம்பர் மாதம் முதல் அமலுக்கு வர உள்ளது.

முன்னதாக புதிய வரிச் சட்டங்கள் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என்று கூறப்பட்டிருந்தது.

இந்தநிலையில், புதிய சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி அரசியலமைப்பின் 120 மற்றும் 121 ஆவது சரத்துகளின் கீழ் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பல மனுக்கள் மீதான விசாரணையின்போது சட்டமா அதிபர் வழங்கிய உறுதிமொழி காரணமாகவே இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# யாழ்.புதிய பஸ் நிலையத்திலிருந்து தனியார் பஸ் சேவைகள் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், நவ. 09

யாழ்.நகரப் பகுதியில் காணப்படும் போக்குவரத்து நெருக்கடிகளைக் கருத்திற் கொண்டு அனைத்து உள்ளூர் மற்றும் வெளியூருக்கான தனியார் பயணிகள் பஸ் சேவைகள் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நெடுந்தூர பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டன.

பஸ் நிலையத்திற்கு நேற்றுக் காலை நேரில் சென்று பார்வையிட்ட யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், யாழ்.மாநகர ஆணையாளர், த.ஜெயசீலன், தனியார் பஸ் சங்கங்களின் பிரதிநிகள், பொலிஸார் இது தொடர்பில் கலந்துரையாடியதுடன் தற்போதுள்ள சில குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பில் ஆராய்ந்தனர்.

தற்போதைய போக்குவரத்து சேவைகளில் ஏற்படுகின்ற இடர்பாடுகளை இனங்கண்டு அடுத்த வாரம் அது தொடர்பில் ஆராய்ந்து இந்தத் திட்டத்தை மேம்படுத்துவதாக யாழ். மாநகர முதல்வர் தெரிவித்தார்.

தனியார் பஸ்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நெடுந்தூர பேருந்து நிலையத்தில் இருந்து சேவையில் ஈடுபடுவதால் யாழ்.நகரப் பகுதி குறிப்பாக ஆஸ்பத்திரி பின் வீதி மணிக்கூட்டுக்கோபுர வீதி ஆகிய வீதிகளில் வாகனங்கள் குறைவாக இருந்ததுடன் நெரிசலின்றியும் பயணிக்கக்கூடியதாக காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. (அ)

# அதிக விலையில் முட்டை விற்போரை தேடி வேட்டை

கொழும்பு, நவ. 09

அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்யும் விற்பனையாளர்களை கண்டறியும் வகையில் நேற்று முதல் சுற்றி வளைப்புகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

விலங்குணவு வகைகள், கால்நடை தீவணம் ஆகியவற்றின் விலைகள் தற்போது குறைவடைந்துள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்யும் விற்பனையாளர்களை கண்டறியும் வகையில் நுகர்வோர் விவகார அதிகாரசபை சுற்றிவளைப்புகளை முன்னெடுக்கவுள்ளதாக அமைச் சர் தெரிவித்துள்ளார்.

முட்டடைக்கான நிர்ணய விலை தீர்மானிக்கப்பட்டு வர்த்த மானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (அ)

# கடலட்டை பண்ணைகளிலிருந்து பாதுகாக்குமாறு மதத்தலைவர்களைச் சந்திக்கும் யாழ். மீனவர்கள்

யாழ்ப்பாணம், நவ. 09

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆரியகுளம் நாகவிகாரை விகாராதிபதி மீகஹஜந்துர சிறிவிமல தேரரை கடலட்டைப் பண்ணை விடயம் தொடர்பாக சந்தித்து கலந்துரையாடினர்.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கச் சமாசங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்தச் சந்திப்பு நேற்றுக் காலை இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் சம்மேளனத்தின் தலைவர் அ.அன்னராசா, உப தலைவர் நா.வர்ணகுலசிங்கம் உள்ளிட்ட பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

கடலட்டை பண்ணைகளை அமைக்கும்போது அதனை ஆய்வுக்குட்படுத்தி மேற்கொள்ளல், ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கடலட்டை பண்ணை தொடர்பாக பேசுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல் போன்ற விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

அரசியல் தலைவர்கள் உட்பட அரசாங்க அதிகாரிகள் கடலட்டை பண்ணை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காத நிலையில் மதத் தலைவர்களைச் சந்தித்து அவர்கள் மூலம் அரசியல் தலைவர்களை அணுகுவதற்காக இந்த நடவடிக்கையை தாங்கள் மேற்கொள்வதாக கடற்றொ



ழிளர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்ததுடன் சகல மதத் தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடவும் தீர்மானித்துள்ளதாகவும் கூறினர். (அ)

# COP27: வளரும் நாடுகளுக்கு காலநிலை நிதி கிடைக்குமா? விவாதமாகும் 'இழப்பு மற்றும் சேதம்'

**நவீன் சிங் கட்கா**

எகிப்தில் நடந்துகொண்டிருக்கும் இந்த ஆண்டின் காலநிலை மாநாட்டில் சலசலப்பை ஏற்படுத்தும் இரண்டு பெரிய வார்த்தைகள் "இழப்பு" மற்றும் "சேதம்." அவற்றுக்குரிய அர்த்தம் என்ன? ஏன் அவை விவாதங்களை ஏற்படுத்துகின்றன?

பசுமை இல்ல வாயுக்களை எவ்வாறு குறைப்பது, காலநிலை நெருக்கடியின் தாக்கங்களை எப்படிச் சமாளிப்பது ஆகிய கேள்விகளில் தான் பெரும்பாலும் காலநிலை பேச்சுவார்த்தைகள் கவனம் செலுத்துகின்றன. இந்த ஆண்டு மாநாட்டில் மூன்றாவதாக இன்னொரு பிரச்னையும் ஆதிக்கம் செலுத்தலாம். காலநிலை மாற்ற சிக்கலை ஏற்படுத்துவதில் பெரும்பான்மையாகப் பங்களிக்கும் அதிக தொழில்மயமான நாடுகள், பாதிப்புகளை நேரடியாக அனுபவிக்கக் கூடிய நாடுகளுக்குப் பணம் செலுத்த வேண்டுமா என்பதுதான் அந்த மூன்றாவது பிரச்னை.

காலநிலை மாற்றத்தின் விளைவாக, வெள்ளம், வறட்சி, சூறாவளி, நிலச்சரிவு, காட்டுத்தீ போன்ற பேரழிவுகள் அனைத்தும் அடிக்கடி நிகழ்வதோடு தீவிரமடைந்தும் வருகின்றன. பாதிக்கப்பட்ட நாடுகள் அவற்றின் விளைவுகளைச் சமாளிக்கப் பல ஆண்டுகளாக நிதியுதவி கேட்டுக் கொண்டிருக்கின்றன.

இதுதான் "இழப்பு மற்றும் சேதம்" என்ற வார்த்தையின் அர்த்தம். இந்தச் சொற்றொடர் வீடுகள், நிலம், வேளாண் நிலங்கள், வணிகங்கள் போன்றவற்றில் ஏற்படும் பொருளாதார இழப்புகள் மற்றும் உயிரிழப்பு, கலாசார தளங்களின் இழப்பு, பல்லுயிர் இழப்பு போன்ற பொருளாதாரமல்லாத இழப்புகள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியது.

நவம்பர் 6ஆம் திகதி 27வது காலநிலை மாநாடு தொடங்குவதற்கு முன் இரண்டு நாட்களாக நடந்த தீவிர பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, இந்த விஷயத்தை அதிகாரபூர்வ நிகழ்ச்சி நிரலில் சேர்க்க பிரதிநிதிகள் ஒப்புக்கொண்டனர்.

ஏழை நாடுகள் பசுமை இல்ல வாயு வெளியீட்டைக் குறைப்பது, காலநிலை மாற்ற தாக்கங்களைச் சமாளிக்க நடவடிக்கை எடுப்பது ஆகியவற்றுக்காக பருவநிலை நிதியுதவியில் பணக்கார நாடுகள் ஆண்டுக்கு 100 பில்லியன் டாலர்கள் கொடுக்க ஒப்புக்கொண்டதோடு கூடுதலாக இந்த நிதியை ஏழை நாடுகள் கேட்கின்றன.

"தீவிரமான புயல்கள், பேரழிவு தரும் வெள்ளம், உருகும் பனிப்பாறைகள் ஆகியவற்றால் ஏற்படும் இழப்புகள் மற்றும் சேதங்களால் மக்கள் அவதிப்படுகின்றனர். வளரும் நாடுகளில் உள்ளவர்களுக்கு ஒரு பேரிடர் நடந்து பிறகு மீண்டும் அடுத்த பேரிடர் தாக்குதல் நடப்பதற்கு முன்பாக மறுகட்டமைப்பு செய்துகொண்டு உரிய நேரத்தில் மீண்டு வருவதற்குச் சரியான ஆதரவு இல்லை.

மோசமான தாக்கங்களின் பாதிப்புகளுக்கு உள்ளாகும் வகையில் முன்வரிசையில் இப்போதுள்ள மக்கள் சமூகங்கள் இந்த நெருக்கடியை ஏற்படுத்துவதில் குறைந்த பங்களிப்பையே செய்துள்ளன," என்கிறார் கிளைமேட் ஆக்ஷன் நெட்வொர்க் இன்டர்நேஷனலில் உலகளாவிய அரசியல் மூலோபாயத்தின் தலைவர் ஹர்ஜீத் சிங்.

**இழப்பு மற்றும் சேதத்திற்கான செலவு எவ்வளவு பெரியது?**

உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சியாளர்கள், கொள்கை வகுப்பாளர்களின் குழுவான லாஸ் அண்ட் டேமேஜ் கொலாபரேஷன், சமீபத்தில் வெளியிட்ட அறிக்கை, மாறிவரும் காலநிலைக்கு மிகவும் பாதிக்கப்படக்கூடிய 55





நாடுகளின் பொருளாதாரங்கள், 2000 முதல் 2020 வரை அரை டிரில்லியன் டாலர்களுக்கு மேல் காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட பொருளாதார இழப்பைச் சந்தித்ததாகக் கூறுகிறது. அடுத்த பத்தாண்டுகளில் அது இன்னும் அரை டிரில்லியனாக உயரலாம்.

"மேலும் புவி வெப்பமயமாதலின் ஒவ்வொரு டிகிரியும் அதிக காலநிலை தாக்கங்களைக் குறிக்கிறது. வளரும் நாடுகளில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் இழப்புகள் 2030ஆம் ஆண்டுக்குள் 290 பில்லியன் வரை இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது," என்று அந்த அறிக்கையின் ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

தொழில்மயமாக்கலுக்கு முந்தைய காலத்தோடு ஒப்பிடும்போது உலகம் ஏற்கெனவே சராசரியாக 1.1 டிகிரி வெப்பநிலை உயர்வைக் கண்டிருந்தது.

ஏழ்மையான மற்றும் குறைந்த தொழில்மயத்தைக் கண்டுள்ள நாடுகள், இதன் விளைவாக ஏற்படும் தீவிர வானிலையின் தாக்கம் பொருளாதார வளர்ச்சியின்



அடிப்படையில் தாங்கள் மேற்கொள்ளும் எந்த முன்னேற்றத்தையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என்று கூறுகின்றன. எதிர்கொண்ட இழப்புகளையும் சேதங்களையும் சமாளிக்க கடன் வாங்க வேண்டியிருப்பதால், கடன் சுமையில் சிக்கிவிட்டதாகச் சிலர் கூறுகிறார்கள்.

**இழப்பு மற்றும் சேதங்களுக்கான கொடுப்பனவுகள் எவ்வளவு காலமாக விவாதிக்கப்பட்டன?**

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு, பாரிஸ் ஒப்பந்தம் "காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளுடன் தொடர்புடைய இழப்பு மற்றும் சேதத்தைத் தவிர்ப்பது, குறைப்பது மற்றும் நிவர்த்தி செய்வது," ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அங்கீகரித்தது. ஆனால், இதை எப்படிச் செய்வது என்று முடிவு செய்யப்படவில்லை.

"இழப்பு மற்றும் சேதம் பல ஆண்டுகளாக மிகவும் பிரச்னைக்குரிய தலைப்பாக இருந்தது. வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளுக்கு இடையே மிக மிக சூடான விவாதங்கள் நடந்துள்ளன," என்று ஜெர்மனி யின் பொருளாதார கூட்டுறவு மற்றும் மேம்பாட்டு அமைச்சகத்தின் மாநில செயலா ளர் ஜோச்சன் ஃப்ளாஸ்பர்த் கூறுகிறார்.

"பெரியளவில் கரிம வெளியீடு செய்வோருக்கு இதுவொரு சட்டபூர்வ கடமையாக மாறக்கூடும் என்று வளர்ந்த நாடுகளில் கவலைகள் இருந்தன. பெரும்பாலான வளர்ந்த நாடுகளுக்கு இது ஒரு சிவப்புக் கோடாகவே இருந்து வருகிறது."

எகிப்தில் நடக்கும் 27வது காலநிலை மாநாட்டில் பேச்சுவார்த்தை நடத்துபவர்கள், பணக்கார நாடுகள் தாங்கள் என்பதையும் இழப்பு மற்றும் சேதத்திற்கு இழப்பீடு வழங்குவதற்கான எந்தவொரு கடமையும் தங்களுக்கு இல்லை என்பதையும் தெளிவுபடுத்த விரும்புவதாகக் கூறினர். வளரும் நாடுகள் அதை எதிர்த்தன. ஆனால், இப்போது பொறுப்பு மற்றும் இழப்பீடு விவாதிக்கப்படாது என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அபுதாபியில் அடுத்த ஆண்டு நடக்கவுள்ள மாநாட்டில் இடைக்கால முடிவெடுப்பதற்கும் 2024-க்குள் உறுதியான முடிவை எடுப்பதற்கும் இந்த மாநாட்டில் இழப்பு மற்றும் சேத நிதி குறித்து விவாதிக்கப்படும் என்று ஒப்பந்தம் கூறுகிறது.

"இன்றைய சூழலில் ஒவ்வொரு நாளும் வளரும் நாடு எதிர்கொள்ளும் நெருக்கடி களைச் சமாளிக்க வழக்கமான, யூகிக்கக் கூடிய, நிலையான நிதியைக் கோரி வருகிறோம். இந்த ஒப்பந்தம் முன்னேற்றத்தை பிரதிபலிக்கிறது. ஆனால், பேச்சுவார்த்தை எப்படி நடக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்," என்று ஐ.நா காலநிலை கூட்டங்களில் ஆப்பிரிக்கா குழுவுடன் முன்னணி காலநிலை பேச்சு வார்த்தையாளர் ஆல்ஃபா உமர் கலோகா கூறுகிறார்.

கிளைமேட் ஆக்ஷன் நெட்வொர்க்கை சேர்ந்த ஹர்ஜீத் சிங், ஒப்பந்தம் ஒரு சமரசம் என்கிறார். "பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கும் நாடுகளுக்கும் எந்தவித உறுதியான ஆதரவையும் வழங்காமல், வரலாற்றுரீதியாக மாசுபடுத்திக் கொண்டிருப்பவர்களை இழப்பீடு மற்றும் பொறுப்பேற்பதில் இருந்து பாதுகாப்பாக வைத்திருக்கும், பணக்கார நாடுகள் வளரும் நாடுகளைத் தள்ளும் விதம் உண்மையில் ஒரு நம்பிக்கைத் துரோகம்."

**இழப்பு மற்றும் சேதம் பற்றிய முக்கிய கருத்து வேறுபாடுகள் என்னவாக இருக்கும்?**

இழப்பு மற்றும் சேதத்திற்கான கொடுப்பனவுகளை எந்த அமைப்பு கையாளும் என்பதை நாடுகள் ஒப்புக்கொள்வது கடினமாக இருக்கலாம்.

காலநிலை மாற்றம் தொடர்பான ஐ.நா மாநாட்டின் மூலம் நிறுவப்பட்ட கருவிகளுக்குள்ளும் அதற்கு வெளியிலும் பொறுப்பேற்கக்கூடிய வழிமுறைகள் இருப்பதாக வளர்ந்த நாடுகள் கூறுகின்றன.

வளரும் நாடுகள், தற்போதுள்ள எந்த நிறுவனமும் அதற்குப் பொருத்தமானவையாக இல்லை என்று கூறுகின்றன.

"சான்றாக, பாகிஸ்தான் சமீபத்திய வெள்ளத்தால் பேரழிவை எதிர்கொண்டபோது, நைஜீரியா பாதிக்கப்பட்டபோது அல்லது சமீபத்தில் கரீபியனை தாக்கிய இயன் சூறாவளியின் போது அந்த அமைப்புகள் எங்கே இருந்தன?" எனக் கேட்கிறார், ஐ.நா காலநிலை கூட்டங்களில் கூட்டுப் பேச்சுவார்த்தை நடத்தும் 39 சிறிய தீவு நாடுகளின் குழுவான அலையன்ஸ் ஆஃப் ஸ்மால் ஐலேண்ட் ஸ்டேட்டஸ் என்ற கூட்டமைப்புக்கான முன்னணி காலநிலை நிதி பேச்சுவார்த்தையாளர் மிகாய் ராபர்ட்சன்.

சிறிய தீவு நாடுகளின் குழுவான அலையன்ஸ் ஆஃப் ஸ்மால் ஐலேண்ட் ஸ்டேட்டஸ் என்ற கூட்டமைப்பு, ஆப்பிரிக்க குழு ஆகிய இரண்டும் ஐ.நா காலநிலை மாற்ற அமைப்புடன் இணைக்கப்பட்ட ஒரு புதிய நிதி வசதிக்கு அழுத்தம் கொடுக்கின்றன. அந்த அமைப்பு, தற்போதுள்ள காலநிலை நிதி நிறுவனங்களில் இருந்து முற்றிலும் வேறுபட்ட வடிவம். இந்தத் தனித்த வசதியின் யோசனை பரவலான ஆதரவைப் பெறாமல் போகலாம் என்கிறார் ஃப்ளாஸ்பர்த்.ஏழை நாடுகளால் இன்னும் கூடுதலான காலநிலை நிதியைப் பெற முடியுமா?

காலநிலை நிதியை அளிக்கும் நிதி நிறுவனங்கள் மற்றும் அதைப் பெறும் நாடுகள் இரண்டிலும் கடந்த காலங்களில் சிக்கல்கள் இருந்துள்ளன.

சர்வதேச நிதி நிறுவனங்களின் அதிகாரத்துவம் காரணமாக, நிதி கிடைக்க நீண்ட காலம் எடுக்கும். மேலும் நிதியைப் பெறும் சில நாடுகளில் மோசமான நிர்வாகம், ஊழல் பிரச்னைகள் உள்ளன.

இருப்பினும், இழப்பு மற்றும் சேதத்திற்கான நிதியளிக்கும் திட்டத்தை ஓரங்கட்டுவதற்கு இதை ஒரு நியாயமான காரணமாக ஏழை நாடுகள் ஏற்றுக்கொள்ளாது. (பிபிசி)

# மக்களின் பொருளாதார இடர்பாடுகளை மறைக்கும் வழமைநிலை போன்ற ஏமாற்று தோற்றப்பாடு!



**கலாநிதி ஜெகான் பெரேரா**

எதிரணி அரசியல் கட்சிகள், பெருமளவு தொழிற் சங்கங்கள், மாணவர் இயக்கங்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களினால் கடந்தவாரம் கொழும்பில் ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டது. ஆர்ப்பாட்டக் குழுக்களை விடவும் கட்டுறுதியான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்திருந்ததை காணக்கூடியதாக இருந்தது. பாரிய பொலிஸ் படையணி ஆர்ப்பாட்டக்காரர்களின் பாதையை மறித்துநின்றது.

பொது வீதிகளில் ஆர்ப்பாட்டங்கள் அனுமதிக்கப் படமாட்டாது என்று பொலிசார் ஏற்கெனவே அறிவித்திருந்தனர். ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதைத் தொடர்ந்து மிகவும் குறுகிய முறையில் சட்டத்தை வியாக்கியானம் செய்யத்தொடங்கிய அரசாங்கம் வீதிகளில் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் ஆர்ப்பாட்டங்களுக்கான இடங்களின் வீச்செல்லையை மட்டுப்படுத்துமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டிருக்கிறது.

மக்கள் ஆர்ப்பாட்டப் பகுதிகளின் நிலைமை 6 மாதங்களுக்கு முன்பிருந்ததை விடவும் மிகவும் குறிப்பிடத்தக்களவுக்கு மாறியிருக்கிறது. அந்த நேரத்தில் போராட்ட இயக்கம் உச்சக்கட்டத்தை எட்டி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை பதவிவிலக வைத்தது. வீதிகள் மாத்திரமல்ல, முழு நாடுமே போராட்டத்தில் இணைந்தது போன்று இருந்தது. தவறான ஆட்சி முறையினாலும் ஊழலினாலும் நாட்டை வங்குரோத்து அடையச்செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என்பது அப்போது போராட்ட இயக்கத்தின் முக்கிய முழக்கமாக விளங்கியது. அரசாங்கத்தின் சில தலைவர்கள் கடற்படைத் தளங்களுக்கு சென்று தங்கியிருப்பதாகவும் தங்களது படகுகளுக்கு எரிபொருட்கள் கிடைக்காததால் அந்த கடற்படை தளங்களை மீனவர்கள் முற்றுகையிட முயற்சிப்பதாகவும் கூட வதந்திகள் கிளம்பின.

அந்த நிலைவரங்களுக்கு முற்றிலும் வேறுபட்ட முறையில், கடந்த வாரம் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற அரசியல் கட்சிகளினதும் தொழிற்சங்கங்களினதும் தலைவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் பாதுகாப்பு படைகளுடன் மோதுவதற்கு விரும்பவில்லை. ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னேறிச்செல்லமுடியாதவாறு பொலிசார் தடைகளை போட்ட இடத்திலேயே போராட்டத்தை அந்த தலைவர்கள் கைவிட்டனர். மாணவர்களும் தீவிரபோக்குடைய அரசியல் செயற்பாட்டாளர்களும் அவர்களை நோக்கி கூச்சலிட்டு கேலிசெய்ததை காணக்கூடியதாக இருந்தது. பொலிசாரின் தடைகளை தாங்கள் தகர்த்து விழுத்தும்போது அந்த தலைவர்கள் தங்களுடன் இணைந்து நிற்கவேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள்.

வன்முறைக்கு வழிவகுக்கக்கூடிய மோதலை தவிர்த்ததன் மூலம் பிரதான போக்கு அரசியல் தலைவர்கள் அமைதியைப் பேணினர். ஆனால், நாட்டு மக்களை வறுமைப்படுத்திய அநீதியான செயல்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வதற்கு மக்களுக்கு இருக்கும் உரிமையை பேணிக்காக்க அவர்கள் தவறிவிட்டார்கள்.

மனித உரிமைகளுக்காக குரல்கொடுப்பதை தங்களது முதல் முன்னுரிமையாக கருதுபவர்கள் மக்கள் போராட்டங்களை அனுமதிக்க மறுத்து ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்து தடுத்துவைத்து துன்புறுத்தும் அரசாங்கத்தின் செயலை கடுமையாக கண்டனம் செய்கின்றனர். கடந்தவார ஆர்ப்பாட்டத்துக்கு முன்னதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரசியரமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறக்கூடியதாக பொலிஸ் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை பொலிசார் பயன்படுத்தக்கூடாது என்று வலியுறுத்திக்கேட்டிருந்தது. அமைதிவழி போராட்டத்தை நடத்துவதற்கு அனுமதியைப் பெறுமாறு பொலிசார் தங்களுக்கு அறிவுறுத்தியது குறித்து தொழிற்சங்கங்களும் மக்கள் அமைப்புக்களும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டுசென்றதை அடுத்தே அவ்வாறு அது வலியுறுத்தியது.

பொலிஸ் ஒழுங்குவிதிகளின் 77 வது பிரிவின்படி அமைதி வழி போராட்டங்கள் அனுமதிக்கப்படுகின்றன என்று ஆணைக்குழு சுட்டிக்காட்டியது. இலங்கையின் அரசியலமைப்பே நாட்டின் அதியுயர் சட்டம் என்றும் அடிப்படை உரிமைகளை மீறுவது பாரதூரமான விளைவுகளைக் கொண்டுவரும் என்றும் ஆணைக்குழு எச்சரித்தது.

மறுபுறத்தில், இலங்கையின் 6 முக்கிய வர்த்தக சம்மேளனங்கள் கூட்டாக அறிக்கையொன்றை வெளியிட்டு ஆர்ப்பாட்டங்கள் பொருளாதாரத்தை நிலையுறுதிப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளை பாதிக்கும் என்பதால் போராட்டத்தை கைவிடுமாறு வேண்டுகோள் விடுத்தன. ஆர்ப்பாட்டங்களினால் ஏற்படக்கூடிய எதிர்மறையான விளம்பரம் பொருளாதார மீட்சிக்காக குறிப்பாக சுற்றுலாத்துறையை மீட்டெடுக்க முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளை தடம்புரட்டிவிடும் என்று அந்த சம்மேளனங்கள் கூறின.

இலங்கை வர்த்தக சம்மேளனம், இலங்கை இளம் தொழில் முயற்சியாளர்கள் சம்மேளனம், இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம், இலங்கை சர்வதேச வர்த்தக சம்மேளனம், இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சம்மேளனம், கைத்தொழில் மற்றும் வர்த்தக பெண்கள் சம்மேளனம் ஆகியவையே கூட்டறிக்கையை வெளியிட்டவையாகும்.

அரசியல் உறுதிப்பாடே இன்றைய தேவை என்ற எடுத்துரைப்பின் மூலமாக தற்போதைக்கு பொதுப் பிரசார போராட்டத்தில் அரசாங்கம் வெற்றியடைகின்றது போன்று தெரிகிறது. வரிக்குறைப்புகள், இரசாயன பசளை வகைகளுக்கு தடை, பாரிய ஊழல் மோசடிகளை கண்டும் காணாமல் இருந்தமை போன்ற முன்னைய அரசாங்கத்தின் செயற்பாடுகளின் விளைவாக 70 சதவீதத்துக்கும் அதிகமான பணவீக்கமும் 100 வீதம் உணவுப்பணவீக்கமும் ஏற்பட்ட பின்புலத்தில் நோக்கும்போது பொருளாதார மீட்சிக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டிய தேவை மறுதலிக்கமுடியாத ஒரு உண்மையாகும்.

தற்போதைய சூழ்நிலையில் அரசியல் உறுதிப்பாட்டுக்கான தேவை குறித்த வர்த்தக சம்மேளனங்களின் வலியுறுத்தல் முற்றிலும் உண்மையே. வறியவர்களைப் பொறுத்தவரையிலும் சரி பணக்காரர்களைப் பொறுத்தவரையிலும் சரி பொருளாதார மீட்சி அவசியம். அதற்கு அரசியல் உறுதிப்பாடு முக்கியமானது. ஆனால், அரசியல் உறுதிப்பாடு தேவை என்பது ஒருபுறமிருக்க, சர்வதேச நாணய நிதியம் காலத்தை இழுத்தடிப்பது நிலைவரங்கள் நாம் நினைப்பது போன்று மேம்பாடு அடைவதாக இல்லை என்பதையே உணர்த்துகிறது.

> **பிரச்சினைகளை அடக்குவது பின்னர் ஒரு கட்டத்தில் அவை வெடிப்பதற்கே வழிவகுக்கும். போராட்டக்காரர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், பாதுகாப்புப் படைகள் முட்டுக்கொடுத்து சீரில்லாத முறையில் சட்டங்களைப் பயன்படுத்தி அரசாங்கத்தை பாதுகாக்கின்ற ஆபத்தான நிலையே உருவாகும்**

தற்போதைய சஞ்சலமான நிலைமையை சிறப்பாக விளக்கக்கூடிய மாற்று கருத்தாடல் ஒன்று இருக்கிறது. ஆனால், அது தற்போது மௌனப்படுத்தப்பட்டிருக்கிறது. அறகலய போராட்டம் உச்சக்கட்டத்தில் இருந்தபோது பொறுப்புக்கூறலுக்கான கோரிக்கையொன்று எழுந்தது. தேசிய பொருளாதாரத்தை வங்குரோத்து அடையச்செய்தவர்கள் தண்டிக்கப்பட்டு, அவர்கள் சூறையாடிய சொத்துக்கள் கைப்பற்றப்பட்டு தேசிய திறைசேரியிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று இளம் போராட்டக்காரர்கள் கோரினார்கள். ஆனால்,போராட்டங்கள் அடக்கியொடுக்கப்பட்டு அதன் தலைவர்கள் கைதுசெய்யப்பட்ட நிலையில் பொறுப்புக்கூறல் பற்றிய பிரச்சினைகளுக்கு அரசியல் கட்சிகளோ அல்லது வர்த்தக சம்மேளனங்களோ இப்போது முக்கியத்துவம் கொடுப்பதாக இல்லை. ஊழலுடன் வாழவேண்டிய தேவை ஏதோ ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று போல நிலைமை இருக்கும் துரதிர்ஷ்டம்.

அந்த பொறுப்புக்கூறல் பிரச்சினைகளை இப்போது அக்கறைகொண்ட சிவில் அமைப்புக்களும் தனிநபர்களும் நீதிமன்றங்களை நாடி கையாளுவதையே காணக்கூடியதாக இருக்கிறது. ஒரு வழக்கை விசாரணை செய்வதற்கு ஏற்றுக்கொண்டிருக்கும் உயர்நீதிமன்றம் அரசாங்க திணைக்களங்கள் அறிக்கைகளையும் கேள்விகளுக்கு பதில்களையும் தரவேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறது.

போராட்ட இயக்கத்தை ஒடுக்கியதன் மூலமும் எரிபொருள் நிலையங்களின் முன்பாக வாகன வரிசைகளை இல்லாமல் செய்ததன் மூலமும் வழமைநிலை ஏற்பட்டதைப் போன்ற ஒரு வெளித்தோற்றத்தை காண்பிப்பதில் அரசாங்கம் கண்டிருக்கும் வெற்றி மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார இடர்பாடுகளை மறைக்கிறது. போராட்டங்கள் அடங்கிப்போன பிறகு அநுராதபுரத்திலும் குருநாகலிலும் சமூகத்தலைவர்களுடன் நடத்திய சந்திப்புகள் வழமைநிலைத் தோற்றம் ஒரு ஏமாற்று என்பதை தெளிவாக காட்டுகின்றன. ஆளும் கட்சியின் கோட்டைகளாக விளங்கும் இந்த இரு பகுதிகளிலும் அரசாங்கத்தின் மீது கடுமையான அதிருப்தி நிலவுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. தாங்கள் எதிர்நோக்குகின்ற பொருளாதார இடர்பாடுகள் குறித்து மக்கள் தெரிவித்த கருத்துகள்,என்னதான் வர்த்தக சம்மேளனங்களின் நல்லெண்ணமும் புரிந்துணர்வு இருந்தாலும், அரசாங்கத்துக்கு தீமைக்கான முன்னறிகுறிகளாகவே தெரிகின்றன.

தங்கள் வயல்களுக்கு தேவையான பசளையில் மூன்றில் ஒரு பங்கே கிடைக்கிறது என்று விவசாயிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகத்தலைவர்கள் கூறுகிறார்கள். விவசாயத்துக்கு தேவையான உள்ளீடுகளின் விலைகள் கடுமையாக அதிகரித்துவிட்ட நிலையில் தங்களின் செலவும் விளைச்சலின் பெறுமதியும் கூட சமமானதாக அமையக்கூடிய நிலை இல்லை என்று அவர்கள் கணிப்பிட்டுகிறார்கள்.


பாடசாலை சிறுவர்கள் காலையில் மயங்கி விழுகிறார்கள். அவர்கள் காலையில் சாப்பிடுவதில்லை என்று ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் கூறுகிறார்கள். முன்னர் அவர்கள் சாப்பிட்ட பிஸ்கட்டுகளைக் கூட வாங்குவது இப்போது கட்டுப்படியாகாமல் போய்விட்டது. பிஸ்கட் கம்பனிகள் விலைகளை மூன்று,நான்கு மடங்கால் அதிகரித்துவிட்டன. இந்த பிரச்சினைகள் ஆர்ப்பாட்டங்களைப் போன்று வெளியில் கண்ணுக்கு தெரிவதில்லை, ஆனால் சமுதாயத்தின் அடிமட்டத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவு இல்லை என்பதை அவை உறுதிசெய்கின்றன.

பிரதான போக்கு எதிரணிக் கட்சிகளினால் நடத்தப்படுகின்ற போராடடங்கள் ஜனநாயகத்தின் ஒரு அடிப்படை பாகமாகும். அறகலயவின் முதற்கட்டம் இந்த தந்திரோபாயத்தின் ஒரு தெளிவான உதாரணமாகும். அது மக்களை ஒன்றிணைத்தது. மக்களின் குரல்கள் செவிமடுக்கப்படுவதற்கான ஒரு வழிவகையாக அது அமைந்தது. அது இலங்கை மக்களினதும் சர்வதேசத்தினதும் கவனத்தை ஈர்த்தது.

மறுபுறத்தில், பிரச்சினைகளை அடக்குவது பின்னர் ஒரு கட்டத்தில் அவை வெடிப்பதற்கே வழிவகுக்கும். பிரச்சினைகளைக் கையாண்டு உணர்ச்சியும் பதற்றமும் பெருகுவதைத் தடுப்பது நாட்டின் உறுதிப்பாட்டுக்கும் நிலைபேறான தன்மைக்கும் நல்லது. போராட்டக்காரர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், பாதுகாப்புப் படைகள் முட்டுக்கொடுத்து சீரில்லாத முறையில் சட்டங்களைப் பயன்படுத்தி அரசாங்கத்தை பாதுகாக்கின்ற ஆபத்தான நிலையே உருவாகும்.


# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? .................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122, 124, 126, ............., ...........   ii) 18, 15, 12, ............., ...........

21) [ 3, 9, 14, 6, 10, 12, ] பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

.....................................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.........................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

.................................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

.................................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ....................................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ........ |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ........ |
| | | மொத்தப்பணம் | | | ............ | ........ |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?


.......................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

....................................................   (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)    2)    3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி   2) இரணைமடுக்குளம்   3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்   2) உதிப்பு   3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்   2) வாளேந்திய சிங்கம்   3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976   2) 1851   3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு   2) இறப்பர், தாழம்பூ   3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6   2) 8
**19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130   2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745
**23.** 455
**24.** 1l 100ml / 1100ml
**25.** ரூபாய் 144.00
**26.** 1) 190   2) 100   3) 290
**27.** 15 : 30
**28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1
**31.** 2
**32.** 3
**33.** 2
**34.** 3
**35.** 2

### கல்வி tv CHANNEL-1 — 09.11.2022 புதன்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2 — 09.11.2022 புதன்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ஜனாஸா எரிப்பு விடயம்; ஆணைக்குழு வேண்டும்

நிந்தவூர், நவ. 09

"உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிவுறுத்தலையும் புறந்தள்ளி கோவிட் காலத்தில் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட படுபாதகச் செயலின் பின்னணி தொடர்பில் கண்டறிய ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி நியமிக்க முன்வரவேண்டும்."

-இவ்வாறு, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கோரிக்கை விடுத்தார்.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 30 ஆவது பேராளர் மாநாட்டில் தலைமைப் பேருரையாற்றுகையிலேயே அவர் இக்கோரிக்கையை விடுத்தது டன், இதனை மாநாட்டுத் தீர்மானமாக நிறைவேற்ற முன்மொழிவதாகவும் கூறினார்.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 30 ஆவது பேராளர் மாநாடு புத்தளம் கே.ஏ.பாயிஸ் ஞாபகர்த்த மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்த மாநாட்டில் தலைவர் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் கடந்த ஆட்சியினரால் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராகப் பெரும் நெருக்கடிகள், படுபாதகச் செயல்கள் தோற்று விக்கப்பட்டு பெரும் துன்ப நிலைக்குத்தள்ளப்பட்டோம்.

ஒரு பயங்கரவாத (சஹ்ரான்) படுபாவியின் செயலை அடிப்படையாக வைத்து, திட்டமிட்ட வகையில் முஸ்லிம் சமூகத்தின் மீது அபாண்டபழிகள் சுமத்தப்பட்டதுடன், தாங்கொணா நெருக்கடிகளும், கொடுமைகளும் நடத்தப்பட்டன.

ஆயிரக்கணக்கான முஸ்லிம் இளைஞர்கள் அநியாயமாகக் கைது செய்தும், நிறைய முஸ்லிம்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டும் ஏவிவிடப்பட்ட அராஜகம் தலைவிரித்தாடியது.

மிகப்படுமோசமான ஆட்சியினரின் இந்த அராஜக அநியாயத்தின் உச்சமாக கொவிட் காலத்தில் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட பெரும் துயர சம்பவங்கள் நிகழ்ந்தன.

முஸ்லிம்களே நோயைப் பரப்புவதாகக் கூறி மாதக் கணக்கில் முஸ்லிம் பிரதேசங்கள் முடக்கப்பட்ட துயர சம்பவங்களும் நிகழ்ந்தன.

கோவிட் ஜனாஸாக்களை எரிக்கவோ, அடக்கம் செய்யவோ முடியுமென உலக சுகாதார ஸ்தாபனம் அறிவுறுத்தியும் முஸ்லிம்கள் பெரும் துயருறும் வகையில் வலுக்கட்டாயமாக ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டன.



முஸ்லிம் நாடுகள், நாடுகளின் தூதுவர்கள் ஜனாஸா எரிப்பை நிறுத்துமாறு விடுத்த கோரிக்கைகளை குப்பைத்தொட்டியில் போட்ட அப்போதய ஜனாதிபதியின் நயவஞ்சகத்தனத்திற்கான பலனை அவரே அனுபவிக்க வேண்டிய நிலைமை எம் கண்முன்னே ஏற்பட்டது.

இதன் எதிரொலியாகவே இம்முறை ஐ.நா. சபையில் இலங்கைக்கு ஆதரவளிக்க அரபு நாடுகள் முன்வரவில்லை.

இந்த அநியாயத்தை முஸ்லிம் சமூகம் மறக்கவில்லை, காலம் காலமாக இந்த வடு எம் மத்தியில் இருந்து கொண்டேயிருக்கும்.

எனவே இந்த கட்டாய ஜனாஸா எரிப்பு அநீதியின் பின்னணி கண்டறியப்படவேண்டும். இழைக்கப்பட்ட இந்த அநீதிக்கு நீதிகிடைக்க வேண்டும்.

இதற்காக ஆணைக்குழு ஒன்றை நியமிக்க இன்றைய ஜனாதிபதி உடன் முன்வரவேண்டுமெனக் கோருகின்றோம்.

இதன் மூலம் இப்படுபாதகச் செயலுக்குப் பின்னாலிருந்த அரசியல் வாதிகள், துணைபோன வைத்தியர்கள், சுகாதாரத்துறையினர் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

மேலும் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் முழு ஆதரவை வழங்கும்.

ஆனால் பயங்கரவாத தடைச்சட்டத்தை வைத்துக்கொண்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை அடக்குமுறையும், பொலிஸ் பயங்கரவாதம், இராணுவ பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படும் செயற்பாடுகளுக்கு ஒரு போதும் ஆதரவளிக்கமாட்டோம்.

இன்று நடுத்தரவர்க்கத்தினரை நசுக்கியுள்ள வரிச்சுமை, பசிபட்டியினால் மக்கள் வாடும் நிலைமைகள், விவசாயிகளின் நிலமைகள் என்பவற்றையெல்லாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது - என்றார்.

(அ-06)



## 6 மணி நேரம் நடைபெற்றது பிரமாண்ட சண்டி ஹோமம்!

அம்பாறை, நவ. 09

உலகிற்கு முதல் சைவசித்தாந்த நூலை தந்தவரும், நம சிவாய என்ற பஞ்சாட்சர மந்திரத்தை அளித்த மூத்த சித்தரான திருமூலர் பெருமானின் குருபூஜையை முன்னிட்டு கடந்த மூன்று தினங்களாக நடைபெற்றுவந்த மாபெரும் சண்டி ஹோமம், நேற்று செவ்வாய்க்கிழமை ஆறுமணி நேர பாரிய யாகத்துடன் நிறைவு பெற்றது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜியின் முன்னிலையில் மட்டக்களப்பு அமிர்தகழியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிய சண்டி ஹோமம், நேற்று செவ்வாய்க் கிழமை நிறைவடைந்தது.

இலங்கையின் இலங்கை பிரபல வேத வாத்தியார் சிவஸ்ரீ வத்சாங்க குருக்களின் தலைமையிலான சிவசிறி சிவ பால குருக்கள் உள்ளிட்ட வேத விற்பன்னர்கள் எண்மர் சண்டி ஹோமத்தை நடத்தினர்.

அனைவரும் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்தவர்கள்.

ஹோமத்துக்கான திரவியங்கள் அனைத்தும் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டிருந்தன.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி சங்கல்பத்தில் இருந்து யாகத்தில் பங்கேற்றார்.

யாகத்தில் சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன் உப தலைவர் மனோகரன் நமசிவாய மகேஸ்வரன் சுவாமி தியாகராஜா காரைதீவு பக்தர்களான ஜெயசிறில் சகாதேவ ராஜா கீதா பிரி மற்றும் கனடா குமார் உள்ளிட்ட பல பிரமுகர்கள் பங்கேற்றனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை அபூர்வமான ஐப்பசி பௌர்ணமி திதியில், அதிகாலை 3 மணிக்கு மாபெரும் சண்டி ஹோமம் ஆரம்பமாகியது.

தொடர்ந்து இந்த பிரபஞ்சத்தில் ஆதாரமாக இருக்கும் 13 சக்திகளுக்கும் யாகத்தில் சிறப்பு பூஜைகள், 64 உபசாரங்கள் இடம் பெற்று காலை 9 மணிக்கு பூர்ணா குதி இடம் பெறுதலுடன் ஹோமம் நிறைவுக்கு வந்தது.

(அ)

## மாணவர்களுக்கு ஐஸ் போதைப்பொருளை விநியோகித்தவர் அதிரடிப்படையால் கைது!

அம்பாறை, நவ. 09

நீண்ட காலமாக பாடசாலை மாணவர்களுக்கு ஐஸ் போதைப்பொருளை விநியோகித்து வந்த சந்தேக நபர் தொடர்பில் கல்முனை விசேட அதிரடிப்படையினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப் படை முகாமுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட அல்மனார் வீதியில் வைத்து சந்தேக நபர் விசேட அதிரடிப்படையினர் மேற் கொண்ட தேடுதலில் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் மருதமுனை 2 பகுதியை ச் சேர்ந்த 28 வயது மதிக்கத்தக்கவர். சந்தேக நபர் வசம் இருந்து 4 கிராம் 350 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் உட்பட சந்தேக நபர் பாவித்த கைத்தொலைபேசி என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட நபர் உள்ளிட்ட சான்று பொருட்களுடன் பெரிய நீலாவணை பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காக ஒப்படைக்கப் பட்டார். (அ)

## 18 அடி முருகன் சிலைக்கான நிர்மாணப்பணிகள் நிறுத்தம்

மட்டக்களப்பு, நவ. 09

வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தில் அமைக்கப்பட்டு வந்த 18 அடி உயரமான முருகன் சிலை நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வன ஜீவராசிகள் திணைக்களம் இந்த தடை உத்தரவை பிறப்பித்து இருப்பதாக ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திசாநாயக்க தெரிவித்தார்.

சம்பவத்தை கேள்வியுற்ற காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஸ்தலத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திசாநாயக்கவைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திசாநாயக்க கூறுகையில்-

கடந்த ஏப்ரல் மாதமளவில் வள்ளிஅம்மன் மலையில் வள்ளியம்மன் ஆலயத்திற்கு பின்னால் 18 அடி உயரமான முருகன் சிலை அமைப்பதற்கு அடிக்கல் நட்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பமானது. இருந்த போதிலும் ஜூலை மாதமளவில் பணியை நிறுத்துமாறு வனஜீவராசிகள் திணைக்களம் அறிவித்தது.

ஆரம்பத்தில் மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் அனுமதி பெறப்பட்டது. தற்போது கொழும்பு தலைமையகத்தில் இருந்து இத் தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது - என்றார்.

தவிசாளர் ஜெயசிறில் கருத்துரைக்கையில்-

இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முற்பட்ட இந்த ஆலயம் மலைகளாலும் மரங்களாலும் சூழப்பட்ட ஒரு பழமையான ஆலயம். ஆலய வளாகத்தில் உள்ள வள்ளியம்மன் மலையில் முருகன் சிலை அமைக்கப்பட்டு வந்தது .என்ன காரணத்துக்காக இது நிறுத்தப்பட்டதோ தெரியாது.

ஆனால் ,இந்த செயல் முழு இந்துக்களின் மனங்களையும் புண்பட செய்திருக்கின்றது. இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிக விரைவாக அனுமதியை வழங்கி இந்த செயற்பாட்டை முன் எடுத்துச் செல்ல உதவவேண்டும்.

அண்மையிலே இந்தியாவில் ராஜஸ்தானிலே 368 அடி உயரமான உலகின் மிகப்பெரிய சிவன் சிலையை அமைத்து அழகு பார்த்தார்கள். எமது நாட்டிலும் உன்னஸ்கிரிய தொடக்கம் நாட்டின் பல பாகங்களிலும் மிக உயர்ந்த புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன .

ஆனால், இங்கு ஆலய வளாகத்துக்குள் ,அதுவும் ஆலயமருகே எழுப்பப்பட்ட இந்த சிலை நிர்மாணம் நிறுத்தப்படுவதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை .

பல அரசியல்வாதிகள் சந்தித்ததாக வண்ணக்கர் கூறினார். அவர்களது முயற்சியும் எனது முயற்சியும் சேர்ந்து நல்லதொரு தீர்வை பெற நடவடிக்கையை மேற்கொள்வோம் - என்றார்.

(அ)



# நசம்ஸ் வான் பாதுகாப்பு அமைப்பை பெற்ற உக்ரைன்!

கீவ், நவ. 09

உக்ரைன் நசம்ஸ் மற்றும் அப்சைட் வான் பாதுகாப்பு அமைப்புகளின் முதல் விநியோகத்தைப் பெற்றுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சர் திங்களன்று தெரிவித்தார்.

"எங்களைத் தாக்கும் எதிரி இலக்குகளை நாங்கள் தொடர்ந்து சுட்டு வீழ்த்துவோம். எங்கள் கூட்டாளர்களுக்கு நன்றி: நோர்வே, ஸ்பெயின் மற்றும் அமெரிக்கா," என ரெஸ்னிகோவ் ருவிட்டரில் தெரிவித்தார்.

ரஷ்யாவின் வான் தாக்குதல்களை முறியடிக்க நசம்ஸ் வான் பாதுகாப்பு அமைப்பை வழங்குமாறு உக்ரைன் நீண்ட காலமாக கோரி வந்தது குறிப்பிடத்தக்கது. (அ)

# அமெரிக்காவின் குற்றச்சாட்டை நிராகரிக்கின்றது வடகொரியா!

பியொங்யாங், நவ. 09

உக்ரைனில் நடந்த போருக்காக ரஷ்யாவுக்கு இரகசியமாக ஆயுதங்களை அனுப்புவதாக அமெரிக்கா கூறியதை வட கொரியா நிராகரித்துள்ளது.

ரஷ்யாவுக்கு ஆயுதங்களை விற்கவில்லை என்றும் அவ்வாறு செய்யும் திட்டம் எதுவும் இல்லை என்றும் கூறியுள்ளது.

வட கொரியா ரஷ்யாவுக்கு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பீரங்கிக் குண்டுகளை வழங்குவதாக அமெரிக்காவிடம் தகவல் இருப்பதாக வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி கடந்த வாரம் கூறியதை அடுத்து, அதிகாரபூர்வ கொரிய மத்திய செய்தி நிறுவனமான கே.சி.என்.ஏ.இன் இந்த அறிக்கை நேற்று செவ்வாய்க்கிழமை வந்துள்ளது.

வட கொரியா மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கா நாடுகளில் உள்ள நாடுகளின் வழியாக அனுப்புவதன் மூலம் ஏற்றுமதிகளை இருட்டடிப்பு செய்ய முயற்சிப்பதாகவும், ஏற்றுமதிகள் பெறப்பட்டதா என்பதை அமெரிக்கா கண்காணித்து வருவதாகவும் ஜோன் கிர்பி கூறினார்.

வட கொரிய பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் குற்றச்சாட்டுகளை வதந்தி என்றும், வடகொரியாவிற்கு ரஷ்யாவுடன் ஆயுத பரிவர்த்தனைகள் இருந்ததில்லை என்றும் எதிர்காலத்தில் அவ்வாறு செய்யும் திட்டம் இல்லை என்றும் கூறினார்.

அமெரிக்காவின் இத்தகைய நகர்வுகள் வடகொரியாவுக்கு எதிராக ஐ.நா. பாதுகாப்பு சபையில் சட்டவிரோதமான தடைகள் தீர்மானத்தை செயற்படுத்துவதன் மூலம் சர்வதேச அரங்கில் வடகொரியாவின் மதிப்பைக் கெடுக்கும் அதன் விரோத முயற்சியின் ஒரு பகுதியாக நாங்கள் கருதுகிறோம் என்று அந்த அதிகாரி மேலும் கூறினார்.

வட கொரியா கடந்த வாரம் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை உட்பட தொடர்ச்சியான ஆயுத சோதனைகளை நடத்தியதை அடுத்து கொரிய தீபகற்பத்தில் பதற்றங்கள் அதிகரித்துள்ள நிலையில், அமெரிக்காவும் தென் கொரியாவும் இதுவரை இல்லாத வகையில் மிகப் பெரிய விமானப்படை பயிற்சியை நடத்தியது குறிப்பிடத்தக்கது. (அ)

### ஆங்கிலக் கால்வாய் அகதிகள் விவகாரம்

# பிரிட்டன் - பிரான்ஸ் இடையே உடன்பாடு?

### மக்ரோன் - சுனக் சந்திப்பை அடுத்துத் தகவல்

கெய்ரோ, நவ. 09

சிறிய படகுகள் மூலம் ஆங்கிலக் கால்வாயைக் கடந்து வருகின்ற அகதிகளைத் தடுக்கின்ற விவகாரத்தில் லண்டனுக்கும் பாரிஸுக்கும் இடையே புதிய இணக்கப்பாடு ஒன்று இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

எகிப்தில் அதிபர் மக்ரோனுக்கும் பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனாக்கிற்கும் இடையே நேற்று முன் தினம் இடம்பெற்ற முதல் சந்திப்பை அடுத்து நம்பர் 10, டவுணிங் வீதி பிரதமர் அலுவலகம் இத் தகவலை வெளியிட்டிருக்கிறது.

இரு தலைவர்களது சந்திப்பின் போது நீண்ட காலமாக இரு நாடுகளுக்கும் இடையே நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகின்ற படகு அகதிகள் விவகாரம் பேச்சுக்களில் முதலிடம் பிடித்திருந்தது எனச் செய்திகள் வந்துள்ளன.

ஐ. நா. பருவநிலை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மக்ரோனும் ரிஷி சுனாக்கும் தற்சமயம் எகிப்தின் ஷாம் எல்-ஷெய்க் நகரில் தங்கியிருக்கின்றனர்.



இந்த ஆண்டு இதுவரை சுமார் 40 ஆயிரம் படகு அகதிகள் பிரிட்டனுக்குள் நுழைந்துள்ளனர். ஆங்கில கால்வாய் தாண்டும் குடியேறிகள் ஏற்படுத்தும் இந்த நெருக்கடி லண்டன் அரசியலில் பெரும் அழுத்தங்களை ஏற்படுத்துவதுடன் பிரான்ஸுடனான உறவுகளையும் அது பாதித்துவருகிறது. குடியேறிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் அதில் பாரிஸின் பங்களிப்பு மிக முக்கியம் ஆகும்.

மக்ரோன் - சுனக் சந்திப்பிற்குப் பிறகு கருத்து வெளியிட்ட பிரிட்டிஷ் பிரதமர் அலுவலகப் பேச்சாளர் ஒருவர், இரு நாடுகளுக்கும் இடையே புதிய குடியேறிகள் உடன்பாடு ஒன்று எட்டப்படும் இறுதிக் கட்டத்தில் இருக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

எனினும் ஒரே இரவில் தீர்த்துவிட முடியாத இந்த நெருக்கடியில் உடன்பாடு எட்டப்பட்டாலும் அது இன்னும் பல படிகளைத் தாண்ட வேண்டி இருக்கும் என்று அவதானிகள் குறிப்பிடுகின்றனர். (அ)

# உலகின் மிகப்பெரிய வெட்டப்படாத மரகதக் கல் கண்டெடுக்கப்பட்டது!

உலகின் மிகப்பெரிய வெட்டப்படாத மரகத கல் சாம்பியா நாட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதன் எடை சுமார் 1.505 கிலோ கிராம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது இந்த கல்லின் மொத்த எடை 7,525 கரட்.



இதனை கின்னஸ் உலக சாதனை தளம் உறுதி செய்துள்ளது.

சாம்பியா நாட்டில் உள்ள காப்பர்பெல்ட் மாகாணத்தின் 'ககும்' என சுரங்கத்தில் இருந்து இந்த மரகத கல் கண்டெடுக்கப்பட்டுள்ளது. புவியியல் ஆராய்ச்சியாளரும், இந்தியருமான மனேஸ் பேனர்ஜி மற்றும் ரிச்சர்ட் ஆகியோர் தங்கள் குழுவினருடன் இணைந்து இதனை அடையாளம் கண்டுள்ளனர்.

இந்த மிகப்பெரிய மரகத கல்லுக்கு 'சிபெம்பேலே' என உள்ளூர் மக்களின் மொழியில் பெயரிடப்பட்டுள்ளது. காண்டாமிருகம் என்பதுதான் அதன் அர்த்தமாம்.

ஏனெனில், இந்த மரகத கல்லின் மேல் பக்கத்தில் காண்டாமிருகத்திற்கு இருப்பதை போலவே கொம்பு போன்ற வடிவம் உள்ளதாம். இதே சுரங்கத்தில் இருந்து கடந்த 2010 ஆம் ஆண்டில் 1.245 கிலோகிராம் எடை மற்றும் கடந்த 2018 ஆம் ஆண்டில் 1.131 கிலோகிராம் எடை கொண்ட மரகத கற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த சுரங்கம் சாம்பியா அரசுக்கும், ஜெம் பீல்ட் எனும் நிறுவனத்திற்கும் சொந்தமானதாம். சிபெம்பேலே மரகத கல் தரமான வகையை சார்ந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை இஸ்ரேல் நிறுவனம் ஒன்று ஏலத்தில் வாங்கி உள்ளது. அதை வாங்கிய அந்த நிறுவனம் இந்த கல் உலகின் மிகப்பெரிய மரகத கல்லாக இருக்க வாய்ப்பிருக்கலாம் என எண்ணி கின்னஸ் உலக சாதனைக்காக சரிபார்க்க அனுப்பட்டுள்ளது. ஆய்வுக்கூட உறுதிக்கு பின்னர் இந்த கல் இயற்கையானது என்பது உறுதியாகி உள்ளது. அதன் காரணமாக இப்போது உலகின் மிகப்பெரிய மரகத கல்லாகவும் அறியப்படுகிறது. (அ)

# உக்ரைன் போர் தீவிரமடைவதைத் தவிர்க்க ரஷ்யாவுடன் இரகசிய பேச்சு நடத்திய அமெ.

நியூயோர்க், நவ. 09

உக்ரைன் போர் மேலும் தீவிரமடைவதைத் தவிர்ப்பது குறித்து அமெரிக்கா, ரஷ்ய உயர் அதிகாரிகளுடன் வெளிப்படுத்தப்படாத பேச்சுக்களை நடத்தியது என வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவிக்க ரஷ்யா மறுத்துவிட்டது.

கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் செய்தியாளர்களிடம் பேசுகையில், ரஷ்யா பேச்சுவார்த்தைக்கு "திறந்த நிலையில்" இருக்கும் போது, ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்த மறுத்ததால் உக்ரைன் உடன் பேச்சுவார்த்தை நடத்த முடியவில்லை" என்றார்.

ஞாயிறன்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் ரஷ்ய உயர் அதிகாரிகளுடன் வெளிப்படுத்தப்படாத பேச்சுக்களை நடத்தியதாக வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் செய்தி வெளியிட்டுள்ளது. (அ)



# அரோன் பின்ஞ் ஓய்வு பெறுகிறாரா?

சிட்னி, நவ. 09

இருபது - 20 கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவது குறித்த கேள்விக்கு அவுஸ்திரேலிய இருபது - 20 அணித்தலைவர் அரோன் பின்ஞ் பதிலளித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டியில் சொந்த மண்ணில் அரையிறுதிக்கு நுழையும் வாய்ப்பை இழந்து வெளியேறியுள்ளது அவுஸ்திரேலிய அணி.

அவுஸ்திரேலிய அணியின் ஒருநாள், இருபது - 20 அணிகளின் தலைவராக இருந்த அரோன் பின்ஞ், கடந்த செப்ரெம்பரில் ஒருநாள் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார்.

அவுஸ்திரேலிய அணி அடுத்த ஓகஸ்ட் வரை எந்த வோர் இருபது - 20 ஆட்டத்திலும் விளையாட வேண்டியதில்லை. 9 மாதங்கள் கழித்து 2023 ஓகஸ்டில் தென்னாபிரிக்காவில் இருபது - 20 தொடரில் விளையாடவுள்ளது ஆஸி. அணி.

இல்லை. இருபது - 20 கிரிக்கெட்டிலிருந்து தற்போது நான் ஓய்வு பெறப்போவதில்லை. பிபிஎல் போட்டியில் விளையாடுவேன். அதன்பிறகு என்ன நடக்கிறது என்று பார்க்கலாம். இருபது - 20 கிரிக்கெட்டில் விளையாடுவதில் இன்னமும் ஆர்வமாக உள்ளேன் என்று கூறியுள்ளார்.

உலகக் கிண்ணத்தில் காயம் காரணமாக பின்ஞ் ஆடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### மகளிர் சம்பியன்ஷிப் ரென்னிஸ்:

# சபலென்கா, கார்சியா இறுதியாட்டத்தில்!



போர்த் வொர்த், நவ. 09

முதல்-8 வீராங்கனைகள் மட்டுமே பங்கேற்றுள்ள டபிள்யூ. ரி. ஏ. இறுதி சுற்று எனப்படும் பெண்கள் ரென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி அமெரிக்காவின் போர்த் வொர்த் நகரில் நடந்து வருகிறது.

இதில் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நடந்த அரையிறுதி ஆட்டம் ஒன்றில் தரவரிசையில் 7ஆவது இடத்தில் இருக்கும் பெலாரஸ் வீராங்கனை அரினா சபலென்கா, முதல்நிலை வீராங்கனை இகா ஸ்வியா ரெக்கை (போலந்து) எதிர்கொண்டார்.

2 மணி 7 நிமிடம் நீடித்த இந்த ஆட்டத்தில் சபலென்கா 6-2, 2-6, 6-1 என்ற செற் கணக்கில் ஸ்வியா ரெக்கை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். இந்த ஆண்டில் 5ஆவது முறையாக ஸ்வியாரெக்குடன் மோதிய சபலென்கா அவரை முதல்முறையாக சாய்த்துள்ளார்.

மற்றோர் அரைஇறுதியில் தரவரிசையில் 6ஆவது இடத்தில் உள்ள கரோலின் கார்சியா (பிரான்ஸ்) 6-3, 6-2 என்ற நேர்செற்றில் 5ஆவது இடத்தில் இருக்கும் மரியா சக்காரியை (கிரீஸ்) தோற்கடித்து இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார். இறுதிப்போட்டியில் சபலென்கா, கார்சியா மோதுகிறார்கள்.

# இங்கிலாந்து, மேற்கிந்தியாவுக்கு எதிரான ஆஸி. அணி அறிவிப்பு

சிட்னி, நவ. 09

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் மற்றும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ள அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டியில் சொந்த மண்ணில் அரையிறுதிக்கு நுழையும் வாய்ப்பை இழந்து வெளியேறியுள்ளது அவுஸ்திரேலியா.

இந்தத் தொடரின் பின்னர் அவுஸ்திரேலியாவில் இங்கிலாந்துக்கு எதிரான 3 ஒருநாள் போட்டிகளில் அவுஸ்திரேலியா விளையாடுகிறது. இந்தத் தொடர் வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இதைத் தொடர்ந்து, மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரிலும் ஆஸி. அணி விளையாடவுள்ளது. இரு டெஸ்ட் போட்டிகளும் எதிர்வரும் 30, டிசெம்பர் 8ஆம் நாட்களில் நடைபெறவுள்ளன.




இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் அணி -

பட் கம்மின்ஸ் (அணித் தலைவர்), அஸ்ரன் எகர், அலெக்ஸ் ஹாரி, கமரூன் கிறீன், ஜோஷ் ஹஸில்வூட், டிராவிஸ் ஹெட், மோர் னஸ் லபுஷேன், மிற்செல் மார்ஷ், கிளென் மக்ஸ்வெல், ஸ்டீவ் ஸ்மித், மிற்செல் ஸ்ரார்க், மார்கஸ் ஸ்ரொய்னிஸ், டேவிட் வோர்ணர், அடம் சம்பா.

மேற்கிந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் அணி -

பட் கம்மின்ஸ் (அணித் தலைவர்), ஸ்காட் போலண்ட், அலெக்ஸ் ஹாரி, கமரூன் கிறீன், ஜோஷ் ஹஸில்வூட், டிராவிஸ் ஹெட், மோர்னஸ் லபுஷேன், ஸ்டீவ் ஸ்மித், மிற்செல் ஸ்ரார்க், டேவிட் வோர்ணர், மார்கஸ் ஹாரிஸ், உஸ்மான் கவாஜா, நதன் லயன், மிட்செல் ஸ்டார்க். (ஐ)

# பாரிஸ் மாஸ்டர் ரென்னிஸ் ஹோல்கர் ரூனே சம்பியன்

## ஜொகோவிச் அதிர்ச்சி தோல்வி

பாரிஸ், நவ. 09

உலகின் முன்னணி ரென்னிஸ் வீரரும் 21 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றவருமான நோவாக் ஜொகோவிச் 19 வயது இளம் வீரரிடம் அதிர்ச்சி தோல்வி அடைந்துள்ளார்.

பாரிஸ் மாஸ்டர்ஸ் 1000 ஏ. ரி. பி. ரென்னிஸ் தொடர் பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் நடைபெற்றது.

இந்த தொடரின் இறுதிப் போட்டி நேற்றுமுன் தினம் நடைபெற்றது. இதில் சேர்பிய நாட்டைச் சேர்ந்த ரென்னிஸ் ஜாம்பவான் நோவக் ஜொகோவிச்சை 19 வயதான டென்மார்க் நாட்டு இளம் வீரர் ஹோல்கர் ரூனே எதிர்கொண்டார்.

இந்த போட்டியில் ஜொகோவிச் எளிதில் வெற்றி பெற்று பட்டம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்டது. அதேவேளை, ரூனேவும் தொடரில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி தரவரிசையில் முதல் 10 வீரர்கள் பலரை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

ஜொகோவிச் ஆட்டத்தின் முதல் செற்றை 6-3 என்ற கணக்கில் கைப்பற்றினார். இரண்டாவது செற்றில் சிறப்பாக விளையாடிய ரூனே 6-3 என வெற்றி பெற்று ஜொகோவிச்சுக்கு அதிர்ச்சி தந்தார்.

தொடர்ந்து அபார ஆட்டதைத் வெளிப்படுத்திய இளம் வீரர் ரூனே இறுதி செற்றை 7-5 என கைப்பற்றி பட்டத்தை தட்டி சென்றார். இதன் மூலம் 3-6,6-3,7-5 என்ற செற் கணக்கில் ஜொகோவிச்சை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார் இளம் வீரர் ரூனே. இந்த வெற்றியின் மூலம் ரூனே தரவரிசையில் முதல் முறையாக 10 இடங்களுக்குள் முன்னேறியுள்ளார். (ஐ)






# அரையிறுதிப் போட்டிகள் தடைப்பட்டால் அடுத்து என்ன?

சிட்னி, நவ. 09

இருபது - 20 உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டிகளுக்கு இந்தியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான் ஆகிய 4 அணிகள் முன்னேறியுள்ளன.

முதலாவது அரையிறுதி இன்று புதன்கிழமை சிட்னியில் நடைபெறவுள்ளது. இதில் நியூசிலாந்து - பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன.

நாளை வியாழக்கிழமை அடிலெய்டில் நடைபெறவுள்ள 2ஆவது அரையிறுதியில் இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதவுள்ளன.

இந்நிலையில், இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகள் சில மழையால் முழுமையாக பாதிக்கப்பட்டன. அதுபோன்று அரையிறுதிப் போட்டிகளும் பாதிக்கப்பட்டால் மறுநாள் போட்டி நடத்தப்படும்.

எனினும், அரையிறுதியில் மறுநாளும் மழையால் ஆட்டம் தடைப்பட்டால் சுப்பர் 12 சுற்றில் இரு குழுக்களிலும் முதலிடம் பெற்ற அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறும். குழு நிலைப்படி இந்தியாவும், நியூசிலாந்தும் முதலிடங்களில் உள்ளன.

இறுதிப் போட்டியன்றும் மழை குழப்பினால் மறுநாள் இறுதிப் போட்டி நடத்தப்படும். இந்தப் போட்டியும் மழையால் குழம்பினால் இறுதிக்கு தகுதி பெற்ற இரு அணிகளும் வெற்றிபெற்றவையாக அறிவிக்கப்படும். (ஐ)

# சகல நாடுகளின் விவசாய அமைச்சர்கள் கூட்டத்துக்கு ஜனாதிபதி ரணில் அழைப்பு

## உணவுத் தேவைகளை மதிப்பிடுவதற்காக

கெய்ரோ, நவ. 09

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான உணவுத் தேவைகளை மதிப்பிடுவதற்கும், உணவு நிலைமை குறித்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் அனைத்து நாடுகளின் அனைத்து விவசாய அமைச்சர்களின் கூட்டத்தை கூட்ட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர், கோப் 27 இன் தலைவர் என்ற முறையில் ஐ.நா மற்றும் எகிப்தின் செயலாளர் நாயகத்திடம் இதனை வலியுறுத்தியுள்ளார்.

எகிப்தின் ஷர்ம் எல் ஷேக் நகரில் நடைபெற்று வரும் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் உணவு பாதுகாப்பு தொடர்பான வட்டமேசை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலகளாவிய உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, பலதரப்பு மற்றும் நிதி ஆதாரங்களுடன் நெருக்கமாகச் செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

2023 பெப்ரவரிக்குள் இத்திட்டத்தை இறுதி செய்வது அவசியமானது எனவும் 2023 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டின் இறுதிக்குள் இதனை அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இல்லையெனில் நாடுகளின் அரசியல் மற்றும் சமூக கட்டமைப்புகளுக்கு ஏற்பட்டுள்ள சேதத்தை ஈடுசெய்ய முடியாததாக இருக்கும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் உலகளாவிய உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஒரு நடுத்தர காலத் திட்டத்தைத் தொகுக்க வேண்டிய அவசரத் தேவையையும் அவர் இதன்பொது எடுத்துரைத்துள்ளார். (அ)

# கந்தக்காடு கலவரச் சம்பவம் 201 கைதிகள் விளக்கமறியலில்

## விசாரணைகளுக்காக ஐவர் அடங்கிய குழு நியமனம்

கொழும்பு, நவ. 09

கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக சிரேஷ்ட அதிகாரிகள் ஐவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவினூடாக தயாரிக்கப்படும் அறிக்கை, நீதி அமைச்சருக்கு வழங்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம், மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கந்தகாடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்ற கலவரச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 201 கைதிகளை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. பொலனறுவை நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கந்தகாடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்ற சம்பவத்தின் பின்னர் 514 கைதிகள் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன் ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

மேலும் அமைதியின்மையின்போது தப்பிச்சென்ற 33 கைதிகளை தேடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரவீ ஹேரத் தெரிவித்தார். (அ)

# துப்பாக்கியுடன் சட்டத்தரணி கைது

கொழும்பு, நவ. 09

அனுமதிப்பத்திரமற்ற துப்பாக்கி ஒன்றை வேனில் எடுத்துச் சென்ற குற்றச்சாட்டில் சட்டத்தரணி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கைது நடவடிக்கை புத்தளம் குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகத்துக்குரிய சட்டத்தரணி தனது வானில், சாலியவெவ கலாவெவ பகுதிக்குச் சென்று கொண்டிருந்த போது வாகனத்தை நிறுத்திச் சோதனையிட்டபோது துப்பாக்கி கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



# அமெரிக்க செனட் குழு வலி.வடக்குக்கு விஜயம்

யாழ்ப்பாணம், நவ. 09

அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகாரங்களுக்கு பொறுப்பான பிரதிநிதிகள் குழுவினர் மீள்குடியேற்றம் காணி விடுவிப்பு தொடர்பாக வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தனை நேற்று முன்தினம் மாலை சந்தித்து கலந்துரையாடினர்.

அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகாரங்களுக்கு பொறுப்பான பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கை வந்துள்ள நிலையில், யாழ்ப்பாணத்திலுள்ள வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு விஜயம் செய்து ஒரு மணிநேரம் வரை தவிசாளருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

சந்திப்புக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தவிசாளர் சோ.சுகிர்தன், படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள தனியார் காணிகள், பல ஆண்டுகளாகியும் மக்கள் மீள்குடியேற்றப்படாமை, படையினர் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவது தொடர்பாக கேட்டறிந்து கொண்டனர்.

1614 ஏக்கர் காணியை சுவீகரிப்பது தொடர்பாக கடந்த மாதம் சுற்றுலா மற்றும் காணி அமைச்சால் பிரதேச செயலருக்கு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டதுடன் தொடர்புடைய ஆவணங்களும் அமெரிக்க செனட் சபையின் குழுவினருக்கு கையளிக்கப்பட்டது.

பொது மக்களின் காணிகளை மக்களிடமே வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம் எனவும் இதனை உயர் மட்டத்திற்கு கொண்டு செல்வோமெனவும் அமெரிக்க செனட் சபையின் குழுவினர் தெரிவித்தார்கள் - என்றார். (அ)

# கந்தக்காடு கட்டுப்பாட்டில்!

கொழும்பு, நவ. 09

பொலனறுவையில் உள்ள கந்தக்காடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையத்தின் நிலைமை தற்போது கட்டுக்குள் இருப்பதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

புனர்வாழ்வு நிலையத்திற்குள் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து கொந்தளிப்பான சூழ்நிலை ஏற்பட்டது. இந்த சம்பவத்தைத் தொடர்ந்து மையத்தில் இருந்து ஏராளமான கைதிகள் தப்பியோடினர். மேலும்சிலர்காயம்அடைந்தனர்.

514 கைதிகள் இராணுவம் மற்றும் பொலிஸாரின் பொறுப்பின் கீழ் உள்ளதாகவும், மோதல்களில் ஈடுபடாதவர்களில் 218 பேர் சேனபுர புனர்வாழ்வு மையத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் ஊடகப் பணிப்பாளரும் இராணுவப் பேச்சாளருமான பிரிகேடியர் ரவி ஹேரத் உறுதிப்படுத்தினார்.

மேலும் 201 கைதிகள் மேலதிக விசாரணைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேலும் 33 பேரை காணவில்லை என இராணுவச் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (அ)

# மந்துவில் றோ.க.த.க. பாடசாலையில் திறன் வகுப்பறை செயல்பாடு ஆரம்பம்





யாழ்ப்பாணம், நவ. 09

தென்மராட்சி நிறுவனங்களின் சர்வதேச ஒன்றியம் ,கணபதி நிதியம் ஐக்கிய இராச்சியத்தை தளமாகக் கொண்ட இரட்ணம் பவுண்டேசன்,ஐ.எம்.எச்.ஒ ஆகிய நிறுவனங்களின் நிதிப்பங்களிப்பில் மந்துவில் றோ.க.த.க பாடசாலையில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை மாணவர்களின் கற்றல்,கற்பித்தல் செயற்பாடுகள் கடந்த 07ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டன.

வித்தியாலய அதிபர் ந. தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்களாக கணபதி நிதிய இணைப்பாளர் க.ராஜேந்திராவும் தென்மராட்சிக்கல்வி வலய விஞ்ஞான பாட வளவாளர் சி.சக்திதரனும் கலந்து சிறப்பித்தனர்.

ஏற்கனவே பயிற்சி வழங்கப்பட்ட ஆசிரியர்களின் வழிகாட்டலில் மாணவ மாணவிகள் திறன் பலகையில் தமது பாடங்களை நிகழ்த்திய பாங்கு நிகழ்வில் பங்கேற்றவர்களை ஈர்த்ததை காணமுடிந்தது.

திறன் பலகையை தம் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைக்கு செயற்படுத்தும் ஆசிரியர்களுக்கான உபாயங்களும் வழங்கப்பட்டன.அத்துடன் மாணவர்கள் தமது ஆராய்வூக்கம் மற்றும் ஆக்குதிறன் முயற்சிகளுக்காக எவ்வாறு திறன் பலகையை பயன்படுத்தி சிறப்பாக துலங்கலாம் என்பது பற்றிய அறிவுரைகளும் விருந்தினர்களால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. (அ)

# திருநெல்வேலி பரமேஸ்வர கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 09

திருநெல்வேலி பரமேஸ்வரக்கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியீடு எதிர்வரும் நவம்பர் 11 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

பரமேஸ்வரக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் யாழ்பாணக் கிளை ஏற்பாட்டில், பேராசிரியர் திருமதி சுபதினி ரமேஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்ட பரமேஸ்வர கல்லூரி நூற்றாண்டு விழா சிறப்பு மலரை செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் வெளியிட்டு வைக்கவுள்ளார். யாழ். பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி ச. முகுந்தன் மற்றும் சைவ சித்தாந்தத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் த. செல்வ மனோகரன் ஆகியோர் நூல் மதிப்பீட்டுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மற்றும் சேர். பொன். இராமநாதன் கட்புல ஆற்றுகைக் கலைகள் பீட நடன மாணவிகளின் விசேட நடன நிகழ்வுகளும் இந்த நிகழ்வில் அரங்கேற்றப்படவுள்ளன.(அ)

## சட்டமா அதிபர்...

காரிகளின் தேவைக்கு ஏற்ப செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இது சட்டமா அதிபர் திணைக்களத்தின் சுயாதீன தன்மைக்கு அவமானமாகும் என்று பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையின் ஏனைய தொகுதிகளையும் மக்களுக்கு பகிரங்கப்படுத்துமாறும் அதில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் அரசாங்கத்தையும் சட்டமா அதிபர் திணைக்களத்தையும் மீண்டும் வலியுறுத்துவதாகவும் பேராயர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை பேராயரின் இல்லத்தில் விசேட அறிக்கையை வெளியிட்டார். அதிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும், “நாட்டில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடிகளால் , மக்கள் எதிர்கொண்டுள்ள நிலைமைகளை புதிதாக விளக்கத் தேவையில்லை. இவ்வாறு மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு கோரி போராட்டங்களில் ஈடுபடுகின்ற சமூக செயல்பாட்டாளர்கள், மனித உரிமைகள் செயல்பாட்டாளர்களுக்கு எதிரான அரசாங்கத்தின் அடக்குமுறைகளும் அதிகரித்துச் செல்கின்றன.

அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள கருத்து சுதந்திரம், அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான சுதந்திரம் என்பன அரசாங்கத்தால் தொடர்ச்சியாக மீறப்பட்டு வருகின்றன. இதன் போது பயங்கரவாதத் தடைச் சட்டமும் நியாயமற்ற முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இது இவ்வாறிருக்க உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்கள் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய விடுதலை செய்யப்படுகின்றமை மக்களை முட்டாள்களாக்கும் செயல்பாடாகும். சட்டமா அதிபர் திணைக்களமானது, உயிர்த்த ஞாயிறு தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கு பதிலாக, அரசாங்கத்தின் தேவைக்கு தேவைக்கு ஏற்ப செயல்பட்டுக் கொண்டிருக்கின்றமையை கண்டிக்கின்றோம்.

இந்த நிலைமையில் உண்மையில் துரதிஷ்டவசமானதாகும். இது சட்டமா அதிபர் திணைக்களத்தின் நீதிக்கும் , அதன் சுயாதீனத் தன்மைக்கும் அவமானமாகும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவர்கள் தொடர்பில் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளவற்றை நடைமுறைப்படுத்துவதிலிருந்து சட்டமா அதிபர் திணைக்களம் ஒதுங்கியுள்ளமை ஏற்றுக் கொள்ள முடியாதவொரு விடயமாகும்.

இதேபோன்று முன்னாள் ஜனாதிபதியிடம் வழங்கப்படவிருந்த சாட்சிகள் அடங்கிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை பொது மக்களிடம் மறைக்கப்படுவதானது, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான உண்மைகளையும் மறைக்கும் செயல்பாடாகும்.

இவ்வாறு மறைக்கப்பட்டுள்ள அறிக்கையின் ஏனைய தொகுதிகளை உடனடியாக மக்களுக்கு பகிரங்கப்படுத்துமாறும் இந்த தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தை நிலைநாட்டுமாறும் அரசாங்கத்திடமும், சட்டமா அதிபர் திணைக்களத்திட மும் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

## 53 வயது...

பிரான்ஸ் நாட்டிலிருந்து வந்த 20 வயது இளைஞருடன் 15 வயது சிறுமி ஒருவர் சில தினங்களுக்கு முன்னர் தலைமறைவாகியிருந்தார்.

இது குறித்து சிறுமியின் பெற்றோர் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் தலைமறைவாக இருந்த இளைஞரையும் சிறுமியையும் பொலிஸார் கைது செய்தனர். சிறுமிக்கு நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில் சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து சிறுமி சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில், அதிகாரிகள் சிறுமியிடம் முன்னெடுத்த விசாரணையில் “எனது பெற்றோர் நெதர்லாந்து நாட்டில் வசிக்கும் 53 வயது நபரை திருமணம் செய்யுமாறு வற்புறுத்தி தாக்கினார்கள். அவருடன் ‘வீடியோ கோல்’ மூலம் உரையாடுமாறு வற்புறுத்தினார்கள். அவர், என்னை நிர்வாணமாக வீடியோ கோலில் உரையாடுமாறு கூறினார். அதற்கு நான் மறுத்தேன். அது தொடர்பில் பெற்றோரிடம் தெரிவித்தேன். அவர்கள், அவருடன் அவ்வாறு உரையாடுமாறு வற்புத்தினார்கள்” என்று வாக்குமூலம் அளித்துள்ளார்.

இதையடுத்து, சிறுமியின் பெற்றோரை கைது செய்த பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## பட்டினி...

தேவைப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள ஐ. நா. முகவரகங்கள் நேற்று வெளியிட்ட கூட்டு அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டன.

மேலும், இலங்கையின் சனத்தொகை 220 இலட்சமாகும். இதில், ஜூன் மாதத்தில் 17 இலட்சம் மக்களுக்கு உதவி தேவைப்பட்டது. தற்போது இது 34 இலட்சமாக அதிகரித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ)

## வியட்நாம்...

பகுதியில் நடந்ததால் படகிலிருந்தவர்கள் வியட்நாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், தற்போது அங்கு தங்கவைக்கப்பட்டுள்ளவர்களை இலங்கைக்கு அழைத்துவர இராஜதந்திர தொடர்பாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். (ஐ)

## ஒன்றிணைந்த...

மேற்படி அதிகாரப் பகிர்வு கோரிய 100 நாட்கள் செயல் முனைவின் நூறாவது நாள் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தின் இறுதியில் வடக்கு, கிழக்கு மாகாண இணைப்பு, மீளப்பெறமுடியாத சமஷ்டி அதிகாரம், வடக்கு, கிழக்கு மக்கள் சபை மூலம் ஆளப்பட வேண்டும் - இதில் 50 வீதம் பெண்களுக்கு உறுதி செய்யப்பட வேண்டும். காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாணத்துக்கு வழங்கப்பட வேண்டும், வடக்கு - கிழக்கிலுள்ள இராணுவமயமாக்கல் நீக்கப்பட வேண்டும், சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்க கடல்பிரதேசங்களில் முகாம்களை அமைக்கலாம், மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும், தமிழ் மக்கள் மீதான போர் குற்றம், காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுக்கு எதிராக சர்வதேச சட்டங்களுக்கு அமைவான நீதி பொறிமுறை அவசியம் உள்ளிட்ட 16 அம்சங்களை வலியுறுத்தி பிரகடனம் வெளியிடப்பட்டது. (ஐ-01 -04 - 06)

# சிறுவர் பாதுகாப்பு விடயத்தில் கவனம் செலுத்துவது அவசியம்

## எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, நவ. 09

சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விடயத்தை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையாகக் கருதவேண்டியது அவசியம் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், “நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள், நாட்டில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் நாம் மிகவும் அக்கறையுடன் செயல்பட வேண்டும் என்பதை எமக்கு எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

நாட்டில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் குழுவும் எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகம் உட்பட அனைத்து துஷ்பிரயோகங்களில் இருந்தும் சிறுவர்களை பாதுகாத்து அவர்களுக்கு பாதுகாப்பான நாளைய எதிர்காலத்தை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் அனைத்து தரப்பினருடனும் இணைந்து செயல்பட வேண்டிய தேவையுள்ளது - என்றார். (கே)

## பாடசாலையில்...

வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

நேற்று பாடசாலை நிறைவடையும் நேரம் உயிரிழந்த மாணவன் வகுப்பு மேசையில் ‘பெயின்ற்’றால் கீறியுள்ளார். அருகிலிருந்த மாணவனின் கை அந்தப் படத்தில் பட்டதால் அது அழிந்து போனது.

இதையடுத்து இரு மாணவர்களிடையே ஏற்பட்ட தர்க்கம் கைகலப்பாக மாறியது. இதன்போது, உயிரிழந்த மாணவனின் வாயிலிருந்து நுரை தள்ளியது.

இதையடுத்து, ஆசிரியர்களின் உதவியுடன் அந்த மாணவன் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஆனால், அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

திருக்கோவில் பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர்.

## காணாமல்...

ஆக்கப்பட்டோர் அலுவலகம் தொடர்பில் நேற்று பாராளுமன்றில் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கருத்து வெளியிட்டிருந்தார். இதன்போதே மனோ கணேசன் எம். பி. மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக ஆராய்ந்து விசாரணை நடத்த மிகவும் கஷ்டத்துடனே அலுவலகம் அமைத்தோம். ஆனால், அதன் தற்போதைய தலைவர், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என யாரும் இல்லை என்று தெரிவித்திருக்கின்றார்.

அவருக்கு பைத்தியம் பிடித்துள்ளதா என எனக்கு தெரியாது. ஏனெனில், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என யாரும் இல்லை என்றால், இதுதொடர்பாக ஆராய அலுவலகம் எதற்கு என்ற கேள்வி எழுகின்றது.

அதனால் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக ஆராயும் அலுவலகத்தின் தலைவர் தொடர்பாக நீதி அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதன் தலைவரை மாற்றவேண்டும். அவரால் முறையாக செயல்பட முடியாது. அவரை வைத்துக்கொண்டு அலுவலகத்தின் பணிகளை மேற்கொள்ள முடியாது - என்றார். (ஐ)

## இராணுவ...

பார்க்கும் ஓர் உளவியல் துன்புறுத்தலாக மட்டுமே அமையும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் சட்டத்தரணியுமான ந. சிறீகாந்தா தெரிவித்துள்ளார்.

போதைப் பொருளை தடுப்பதற்கு மீண்டும் இராணுவ சோதனை சாவடிகள் வடக்கு ஆளுநரின் பரிந்துரையின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட படைகளின் தளபதி அறிவித்திருந்தார்.

இது தொடர்பில் சிறீகாந்தா வெளியிட்ட அறிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனையையும் கடத்தலையும் தடுக்கும் நோக்குடன் பிரதான வீதிகளில் இராணுவ சோதனைச் சாவடிகள் அமைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருப்பது ஆச்சரியத்தை அளிக்கின்றது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அன்றாட வாழ்கைக்கே அல்லாடிக் கொண்டிருக்கும் பொதுமக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்கள் போதாது என்ற ரீதியிலா இந்த நடவடிக்கை என்றே கேட்கத் தோன்றுகின்றது.

யாழ்ப்பாணம் உட்பட தமிழ்ப் பிரதேசத்தில் இராணுவச் சோதனைச் சாவடிகள் என்பன, அநாவசியமான கெடுபிடிகளை ஏற்படுத்தி, உளவியல் ரீதியாக அச்சுறுத்தி நிற்கும், வெறுப்புக்குரிய ஒரு பொறிமுறையாகவே கடந்த காலத்தில் இருந்து வந்துள்ளன என்பதே அனுபவபூர்வமான உண்மை.

இந்தப் பின்னணியில், வடக்கின் ஆளுநர் இராணுவ சோதனைச் சாவடிகளை ஏன் பரிந்துரைத்துள்ளார் என்பது புதிராக உள்ளது.

மிகவும் ஆட்சேபகரமான விடயமாக படைத் தரப்பினரால் தொடர்ந்து அணுகப்பட்டு வந்திருக்கும் மாவீரர் நினைவஞ்சலி வாரம் நெருங்கி வரும் சூழ்நிலையில், போதைப் பொருள் தடுப்பு என்ற பெயரால் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கை, நீறு பூத்த நெருப்பாக நீடிக்கும் தமிழ் மக்களின் நீண்டகால துயர நினைவுகளை உரசிப் பார்க்கும் ஓர் உளவியல் துன்புறுத்தலாக மட்டுமே அமைய முடியும் என்பதை தயக்கம் எதுவும் இன்றி சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

இந்த சோதனைச் சாவடிகளில் சில சிற்றெறும்புகள் வேண்டுமானால் சிக்கலாம். ஆனால், சுண்டெலிகளும் பெருச்சாளிகளும் ஒருபோதும் மாட்டிக்கொள்ளப் போவதில்லை. கடலிலே கடற்படையிடம் போதைவஸ்து மீன்கள் சிக்குவது போல, தரையில் நிகழப் போவதில்லை. இந்தச் சூழ்நிலையில், அர்த்தமற்ற இந்த திட்டத்தை கைவிடுமாறு வடமாகாண ஆளுநரை நாம் கோருகின்றோம்.

இதேவேளையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் விஸ்வரூபம் எடுக்க முனையும் போதைப் பொருள் பிரச்சினைக்கு முடிவு கட்ட அறிவார்ந்த ரீதியில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அவசரமாக எடுக்கப்படுவது அவசியமானது என்றும் நாம் தெரிவிக்க விரும்புகின்றோம் - என்றுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

## அமெ. இராஜதந்திரி இலங்கை வருகை

கொழும்பு, நவ. 09

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் தகவலின்படி, தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பணியகத்தின் பிரதி உதவிச் செயலாளர் அப்ரீன் அக்தர் இலங்கை வந்துள்ளார்.

தனது விஜயத்தின்போது, பிரதி உதவிச் செயலாளர் மூத்த அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளார்.

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் என அக்தர் உறுதியளித்துள்ளார். (அ)

## காணாமற்போனோருக்கு நியாயம் கிட்டும்வரை போராட்டம் தொடரும்

### சபையில் செல்வம் எம்.பி. எச்சரிக்கை



கொழும்பு, நவ. 09

**“வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட, கண் முன்னாலே ஒப்படைக்கப்பட்ட அத்தனை பேரும் படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதனை இந்த அரசாங்கம் ஒப்புக்கொள்கின்றதா? அதனை அமைச்சர் வெளிப்படையாக கூறவேண்டும்” என்று தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், இதற்கான நியாயம் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என்று தெரிவித்தார்.**

நீதியமைச்சர் விஜயதாஸ, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவரும் உயிரோடு இல்லை என்று அண்மையில் ஒரு கருத்தை வெளியிட்டிருந்தார். அத்தனை பேரும் படுகொலை செய்யப்பட்டார்களா என்பதை அமைச்சர் வெளிப்படையாக கூறவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## சம்பந்தன் எம்.பிக்கு மூன்று மாத விடுமுறை

கொழும்பு, நவ. 09



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பிக்கு 3 மாதங்கள் விடுமுறை வழங்குமாறு எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

அவரது கோரிக்கைக்கு பாராளுமன்றம் அனுமதி வழங்குவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்தார். (அ)

## தமிழர் பிரச்னை தீர்க்கப்படாவிடில் பொருளாதாரத்தை மீட்க முடியாது!

### சபையில் சாணக்கியன் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 09



நீண்ட காலமாக நீடித்து வரும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காமல் பொருளாதாரப் பிரச்னைக்குத் தீர்வினைக் காணமுடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் இன்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றிய அவர், தமிழர்களுக்கு தீர்வை வழங்காமல், அதற்கு தடையாக இருப்பவர்கள் யார் என்பது குறித்து சிங்கள மக்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கங்கள் நிறைவேற்றாத காரணத்தினாலேயே சர்வதேச அழுத்தங்கள் இலங்கை மீது பிரயோகிக்கப்பட்டன.

எனவே நாட்டை இரண்டாக பிரிக்காமல் அதிகாரத்தை பிரித்து வழங்கி ஒரு தீர்வை வழங்கவேண்டும். அதிகாரப் பரவலாக்கல் என்பது நாட்டை பிரிக்கும் யோசனை இல்லை-என்றார். (அ)

## அரசின் தீர்வு முயற்சிகளுக்கு சில தமிழ் எம்.பிக்களே தடை!

### பாராளுமன்றத்தில் விஜயதாஸ கண்டனம்

கொழும்பு, நவ. 09

தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் நிலையில், அதற்கு எதிராக ஒரு சில தமிழ்ப் பிரதிநிதிகளே எதிர்ப்பை வெளியிடுவதை வண்மையாக கண்டிப்பதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர், “21 ஆவது அரசியலமைப்பு திருத்தச்சட்டத்தை நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்கிய அனைத்துத் தரப்பிற்கும் நான் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசமைப்பு பேரவையை நாம் விரைவில் ஸ்தாபிக்கவேண்டும். மேலும், சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான ஆணையாளர்களை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதற்கும் கட்சித் தலைவர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என இவ்வேளையில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த மாத இறுதியில் யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் நாம் இரண்டு நடமாடும் சேவை நிகழ்வுகளை நடத்தினோம். வடமாகாண மக்களின் பிரச்னைகளை தீர்க்கும் வகையிலேயே இவற்றை நடத்தினோம்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகைத் தந்துள்ள பலருக்கு தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, கல்விச் சான்றிதழ் உள்ளிட்ட சான்றிதழ்கள் இல்லை. எனவே, இந்தப் பிரச்சனைகளை தீர்க்கும் வகையில் 12 அமைச்சுக்களை ஒன்றிணைத்தே நாம் இந்த நடமாடும் சேவை பணியை முன்னெடுத்திருந்தோம்.

நாம் இந்தப் பணிகளை துரிதமாக நிறைவு செய்யவும் எதிர்பார்த்துள்ளோம். இந்த நிலையில், நாம் யாழ்ப்பாணத்தில் நடமாடும் சேவை நிகழ்வை நடத்தியபோது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் 20 இற்கும் மேற்பட்ட பெண்கள் எதிர்ப்பை வெளியிட்டார்கள்.

கிளிநொச்சியிலும் எமக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. எனினும், நாம் எமது பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்தோம். பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் எமக்கு இதன்போது முழுமையான ஒத்துழைப்பை வழங்கினார்.

நாம் தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்க்க தற்போது நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்த நிலையில் எமது முயற்சியை சீர்குலைக்கும் ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாட்டை நாம் கண்டிக்கிறோம்-என்றார். (அ)

## திட்டமிட்டபடி பரீட்சைகள்!

கொழும்பு, நவ. 09

க.பொ.த. உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை என்பன பிற்போடப்பட மாட்டாது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பல்வேறு காரணங்களால் உயர்தரப் பரீட்சை மற்றும் பரிசில் பரீட்சையை பிற்போடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டமைக்கு இணங்க பரீட்சை திகதியை நிர்ணயித்ததாக குறிப்பிட்டார்.

நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின்போதே கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இவ்வாறு குறிப்பிட்டார்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையை டிசம்பர் 18ஆம் திகதியும், உயர்தரப் பரீட்சை 2023 ஜனவரி 23 முதல் பெப்ரவரி 17ஆம் திகதி வரையிலும் நடத்துவதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. (அ)

## பொது அமைதியை பேணுவதற்கு சகல ஆயுத படைகளும் அழைப்பு!

### சபாநாயகர் பாராளுமன்றில் அறிவிப்பு



கொழும்பு, நவ. 09

பொது அமைதியைப் பேணுவதற்காக அனைத்து ஆயுதப் படைகளையும் அழைத்து ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார் எனச் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்தார்.

பாராளுமன்ற அமர்வுகள் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமான நிலையில், காலை 9.30 மணியளவில் இந்த விடயம் குறித்த ஜனாதிபதியின் மகஜரைச் சபாநாயகர் சமர்ப்பித்தார்.

குறித்த மகஜரில், 40ஆவது அதிகாரசபையின் பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் 12ஆவது பிரிவின்படி தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி பொது ஒழுங்கைப் பேணவேண்டியதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டு, அனைத்து ஆயுதப்படை உறுப்பினர்களும் அழைக்கப்படவேண்டும் என்று உத்தரவு பிறப்பிப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அதேநேரம் குறிப்பிட்ட சில பகுதிகளில் பொது ஒழுங்கை பராமரிக்கவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.